# பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை

நான் ஒரு மானுடன்: நான் மதியாதன
மானுட வாழ்வில் இலை.

மாலை - II ஆவணி — 1925 காசு - 5


## "வந்தே மாதரம்"

(ஸ்ரீ. சி. சு. பாரதியார் மொழிபெயர்ப்பு



ளிர் மணி நீரும் நயம்படு கனிகளும்
குளிர் பூந்தென்றலும், கொழும்
பொழில் பசுமையும்
வாய்ந்தநன்கு இலகுவை, வாழிய
அன்னை (வந்தே)

2. தெண்ணில வதனில் சிலிர்த்திடும் இரவும்,
தண் இயல் விரிமலர் தாங்கிய தருக்களும்,
புன்னகை ஒளியும், தேமொழிப் பொலிவும்
வாய்ந்தனை, இன்பமும் வரங்களும் நல்குவை. (வந்தே)

3. கோடி கோடி குரல்கள் ஒலிக்கவும்,
கோடி கோடி புயத்துணை, கொற்றம் ஆர்
நீடு பல்படை தாங்கி, முன் நிற்கவும்,
கூடும் ஆண்மை குறைந்தனை என்பதென்?
ஆற்றலில் மிகுந்தனை, அரும்பதம் கூட்டுவை,
மாற்றவர் கொணர்ந்த வன்படை ஓட்டுவை. (வந்தே)

4. அறிவு நீ, தருமம் நீ, உள்ளம் நீ, அதனிடை
மருமம் நீ, உடற்கண் வாழ்ந்திடும் உயிர் நீ,
தோளிடை வன்பு நீ, நெஞ்சகத் தன்பு நீ,
ஆலயந் தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலை எலாம், தேவி இங்கு உனதே. (வந்தே)

5. பத்துப் படைகொளும் பார்வதி தேவியும்,
கமலத்து இதழ்களில் களித்திடும் கமலையும்,
அறிவினை அருளும் வாணியும், அன்னை நீ. (வந்தே)

6. திரு நிறைந்தனை, தன் நிகர் ஒன்றிலை,
தீது தீர்ந்தனை, நீர்வளம் சார்ந்தனை,
மருவு செய்களின் நற்பயன் நல்குவை,
வளனின் வந்ததோர் பைந்நிறம் வாய்ந்தனை,
பெருகும் இன்பம் உடையை, குறுநகை
பெற்று ஒளிர்ந்தனை, பல்மணி பூண்டனை,
இருநிலத்து வந்து எம்முயிர் தாங்குவை,
எங்கள் தாய், நின் பதங்கள் இறைஞ்சுவாம்"—(வந்தே)

# நமது தற்கால கடமை

ஸ்ரீ. ஆ. வ. பத்மநாப பிள்ளை, ஆரியூர்.

ஏனைய நாடுகள், குடியரசு இத்தகைத்து, முடியரசு இத்தகைத்து என்பதையும், தம்முட் சிறந்த ஒரு தலைவன் கீழ் அனைவரும் ஒன்றுபட்டு வாழ்ந்து தத்தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளல் வேண்டும் என்பதையும் அறிந்தெழாது, கண்டவற்றைக் கொன்று உண்டும், ஆடையால் மானத்தைக் காப்பாற்றாமலும், கேவலம் விலங்குகள்போல, காடுகள் முதலிய இடங்களில் திரிந்து அலைந்துவந்த மக்களையுடையனவாக விருந்த பழைய காலத்திற்கு முன்னரே, பிறநாட்டுச் சரித்திரங்கள் எழுதப்படுவதற்கு எண்ணிலா யாண்டுகள் முன்னரே, நமது பாரத மணித்திருநாடு, குடியரசைத் தழுவிய முடியரசின்கீழ், மொழி, சமயம், வகுப்பு முதலியவற்றில் பலதிறப்பட்ட பிரிவுகளைக் கொண்டிருப்பினும், 'இந்நாட்டினர் அனைவரும் ஓர் அன்னையின் மக்களே' என்னும் உணர்வு மிகுந்து, அழுக்காறு, அவா முதலிய உட்பகைகளின்றி, ஒற்றுமையாய் வாழும் மக்களை உடைத்தாயிருந்ததெனில், அதன் ஞான அரசியல் வாழ்வை என்னென்று கூறுவது! மக்களது நாகரிகம், அரசியல், சமய ஒழுக்கம் முதன் முதல் இந்நாட்டிலேயே தோன்றியதென்பது, சரித்திர ஆராய்ச்சி வல்லுநர் துணிபு. அத்தகைய சமரச ஞான உணர்ச்சி, சமயத்தொடு பிணைக்கப்பெற்ற அரசியல், நீங்கிப் பலயாண்டுகள் சென்றன.

கலியின் கொடுமையாலோ, பிற்காலத்தில் தோன்றிய 'மன்னர்'களின் திறமையின்மையாலோ, நம் வேந்தர் ஆட்சி நமது நாட்டி

னின்றும் நீங்கிய பின்னர், கிரேக்கர், முகம்மதியர், ஆங்கிலேயர் முதலிய வேற்றுநாட்டு மக்கள், இந்தியநாட்டின் வலியற்ற நிலையைக் கண்டு, பொன் விளையும் பூமியாம் இப்புனித நாட்டின்மேல் ஆசை வைத்து, ஒருவர்பின் ஒருவராக முறையே படையெடுத்து வருவாராயினர். அந்நாள் தொட்டு இந்நாள் வரை நம்மை ஆட்டி வரும் அடிமை வாழ்க்கை, பாழும் 'வேற்றுமைப் பே' யாலன்றோ வேரூன்றியது! கடந்தது கடக்கச் சென்றதைப்பற்றி; சிந்திப்பதிற் பயனொன்று மில்லை. இனியேனும், எச்சரிக்கையாக இருந்து, நாட்டுத்தொண்டு செய்ய முன்வரல் வேண்டும்.

இந்நாடு ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டபின், ஆரம்ப காலத்தில், பல யாண்டுகள் சுதந்தரமே பெற்றிருந்தது எனக் கூறலாம். பின்னர், நாளேற நாளேற, மூங்கிலிற் பிறந்ததீ தன் மூங்கிலையே அழித்தல் போல, நமமவருள் நாட்டுப் பற்றும நிவினையச்சமும் சிறிதுமிலாப் பேதைகள் சிலர் சூழ்ச்சியினாலே, அன்னார் தன்னலங் கருதிச் செய்த நயவஞ்சனையினால், ஆங்கில ஆட்சியினரும பக்ஷபாத மற்ற நீதி வழங்குவதில் பிறழாநின்றனர். 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்பது ஆன்றோர் அமுதமொழி. மற்றும், அக்கால அரசியல், உலகுக்கும் நாட்டு மக்களுக்கும் யாதொரு தொடர்பும் இருந்த தில்லை. 'அடிமைக் கல்வி' கற்று, தந்நலத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்த ஒருசில 'படித்த வகுப்பா'ரே, அக்கால அரசியல் உலகை அறிவர். ஆதலின், அரசாங்கத்தார் நாட்டின் சட்ட திட்டங்களை ஆக்குவதில் பொது ஜன அபிப்பிராயத்தைக் கவனித்து நடந்திலர்; எனினும், பாரத தேவியின் நற்கால அறிகுறியாக, பின்னும நாளாக, நாளாக 'அடிமை வாழ்க்கை'க்கு உறுதுணையாக இருந்த ஆங்கிலக் கல்வியே ஒரு சில அறிஞர்களது மனச்சான்றைத் தூண்டி, ஆட்சி முறையின் குறைகளைப் புலப் படுத்தியது.

அத்தகைய புத்துணர்வு தோன்றியதும், அரசாங்கத்தார் தட்டிக்கொடுத்தலினும், பட்டம் வழங்குவதினும் மயங்கிவிடாது, தெளிவுற்ற அறிவாளிகள் சிலர், ஓர் அவையை நாட்டி, அதன் வாயிலாகத் தீர்மானங்களைச் செய்தும, விண்ணப்பங்களை அனுப்பியும், தமது குறைகளைப் போக்குமாறு முறையிட்டு வருவாராயினர். அச் சபையே, இது காலை நமது தேசிய உணர்ச்சிக்கு அடிப்படையாக வுள்ள 'காங்கிரஸ்' ஆகும். அததகையோர், சிறுபான்மையினராக இருந்தமையானும், தமது யதேச் சாதிகார ஆட்சியை முட்டின்றி நடாத்திச் செல்வதற்கு, ஏனைய பெரும்பான்மையோரான 'ஆமாம் பூசாரி'களே போதிய உறுதுணையாக வாய்த்தமையானும், அக் காலத்துத் தேசாபிமானிகளின் முறையீடுகளும், விண்ணப்பங்களும், 'செவிடன் காதில் ஊதிய சங்கேபோல்' பயன்பட்டில. பின்னும்

நாளாக நாளாக, 'காங்கிர'ஸில் வீரமக்கள் பலர் தோன்றுவாராயினர். அன்னாரது அரிய ஊழியத்தின் பயனாக, அவ்வரசியல் நடைமுறைகளை, படித்த வகுப்பாரே யன்றி, பாமரரும் சிறிது அறிவாராயினர். ஆகவே, நாட்டில் 'காங்கிர'ஸுக்குப் பரந்த செல்வாக்கு ஏற்பட்டது. இவ்விளைவு, அரசாங்கத்தாரது யதேச்சாதிகார ஆட்சிக்குத் தனிப்பெரும் ஊறாக முளைத்ததாதலின், அதை விதைத்த தேசபக்தர்களைச் சிறையிலிட்டும், வாய்ப்பூட்டிட்டும், அக் கிளர்ச்சியை அடக்க முயல்வாராயினர்; எனினும், அன்னார்க்கு உள்ளூற அச்சம் அச்சமே.

இச்சமயத்தில், தென்னாப்பிரிக்காவிற்கு இங்கிருந்து சென்று குடியேறி, அடிமை வாழ்க்கை நடாத்தி வந்த இந்திய மக்களுக்கு உறக்கத்தை ஒழிப்பித்து, உணர்வை அளித்து, உற்சாகமும் வீரமும் ஊட்டி, சாத்துவிகப்போர் செய்து, முடிவில் வெற்றியும் பெற்று விளங்கிய காந்தியடிகளார், நமது துர்ப்பாக்கிய நாட்டிற்கு, பாரததேவியின் பெருந்தவப்பயனாக, மீண்டு எழுந்தருளினர். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராம்' தவப்பெருந் தொண்டர், 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும்' நயவஞ்சகச்சூழ்ச்சியின்றி, உள்ளும் புறமும் ஒன்றுபட்டு, சொல்லளவில் நில்லாது செய்கையிலும் திறம்பட நடாத்திக் காட்டும் சீரிய இயல்புடையோர், ஏழையர் தந்தோழர், எமபெருமான் காந்தியடிகளார், காங்கிரஸில் புகுந்த நாள் தொட்டு, மேல் நாட்டு நாத்திக அரசியல் நாற்றம் வீசுவதுபோய், பண்டைய ஆரிய தெய்விக அரசியல் மணங் கமழத் தொடங்கியது; 'விண்ணப்பங்களாலும், முறையீடுகளாலும் எப்பயனும் விளைதல் அரிது,' எனும் உண்மை விளங்கிற்று. ஆதலின் அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு, அறம் பெருக்க வந்த எமது அடிகளார், சட்டசபைப் புறக்கணிப்பு, அடிமைக் கல்விப் புறக்கணிப்பு முதலிய அழிவு (பகிஷ்கார) வேலைகளையும், ஹிந்து - முஸ்லீம ஒற்றுமை, கதர் பிரசாரம், தீண்டாமை நீக்கம் முதலிய ஆக்க (நிர்மாண) வேலைகளையும், வகுத்தருளினர். அம்முறைகளைப் 'பாரத மஹாஜன ஸபை' (காங்கிரஸ்)யும் ஏற்றுக்கொண்டது. ஆரம்ப உற்சாகத்திலும், அடிகளாரது பெருமுயற்சியினாலும், அவ்வொத்துழையாக் கிளர்ச்சி தோன்றிய காலத்து, ஏறத்தாழ இரண்டு மூன்று வருடங்களாக, நாட்டிலுள்ள பலதிறப்பட்ட 'வேற்றுமை'களெல்லாம் 'ஒற்றுமை' வெள்ளப் பெருக்கில் முனைந்து நிற்க முடியாது, வீழ்ந்து, ஒன்றுபட்டு, வெகு வேகமாக, ஓடின. அவ்விரு வருடங்களாக, அரசாங்கத்தார் பேரச்சமும், தேச பக்தர்கள் பெரு மகிழ்வும், நாட்டு மக்கள் பெரு வியப்பும் எய்துமாறு, அடிகள் வகுத்த ஆக்க, அழிவு வேலைகளால், முன் முப்பது ஆண்டுகளில் விளையாத நறபெரும் பயன்கள் விளைந்தன.

அடிகள் சிறை யடைந்ததும், தலைவர்களுக்குள் புகைந்து கொண்டிருந்த 'வேற்றுமைத் தீ' கொழுந்து விட்டெரியத் தலைப்பட்டு, கட்சிகள் பற்பல தோன்றின; புறங்கூறலும், அழுக்காறும், தலைமைப் பதவியில் ஆர்வமும் தலைவிரித்தாடின; செயலிற் பயனும், தேச பக்தியும், தன்னலங் கருதாமையும் தலைகாட்டாதோடின; அவ்வேளையில், நாட்டில் தோன்றிய கட்சிகள் பலவற்றுள், பிறவற்றைக் காட்டிலும் பெரிதுஞ் சிறந்தது 'சுய ராஜ்ய'க் கட்சியே யாம். அக்கட்சியின் தலைவர்களது உழைப்பின் பயனாக, அது நாட்டின் பேராதரவைப் பெற்று, செல்வாக்கிற் சிறந்து, 'காங்கிரஸ்' ஆதரவையு மடைந்து, அஞ்சாவீறு கொண்டு முனைந்து நின்று, சட்ட சபையில் முட்டுக்கட்டை யிட்டு, நடை முறைகட்குத் தடைகளை விளைத்தலை, நாடு வியக்கத்தக்கவாறு நடாத்தி வந்தது; அதனால், இதுகாறும் எவராலும் குலைக்கப்படாத இரட்டை யாட்சி நடைமுறை, இருமுறைகளில் தகர்க்கப்பட்டது. ஆதலின், இதுகாறும் எத்தகை இடையூறுமின்றி அரசாங்கத்தார் நடாத்தி வந்த யதேச்சாதிகார ஆட்சி தளர்வுற்றது. சுருங்கக் கூறின், அக்கட்சியின் அருஞ் செயல்கள் நாட்டின் கருத்தையே பெரிதும் ஈர்த்தன. இன்றுவரை, 'சுயராஜ்யக் கட்சி' ஒத்துழைப்புச் சேற்றில் வீழ்ந்து ஒளியாது தப்பித்தது களிக்கத் தக்கதே.

இத்தகைய அரிய நிலையில், அக்கட்சியையே சிருட்டித்து, அரசாங்கத்தை அலைத்த அரும்பெறல் வாய்ந்த வீரர் தேசபந்து தாசர், எவரும் எதிர் பாரா வாறு, திடீரென ஆண்டவன் அடியினைச் சேர்ந்தார். அந்தோ! கொடுமையினுங் கொடுமை, நமது துரதிருஷ்ட நாட்டின் தலைவிதி இருந்தவாறு! விண்ணப்பங்களாலும், முறையீடுகளாலும், பிறபல ஒத்துழைப்பு முறைகளாலும் எப்பயனும் விளையாது எனுமுண்மை, சமீபத்தில் இந்தியா மந்திரி பேசிய பேச்சால் இனிது புலனாய் விட்டது; தேசபந்து பேராவலோடு எதிர் பார்த்த பெரும் பயன் போய், 'யானைக்குப் பூனை'யளவு கூடக்காணோம்; அன்னார் நிகழ்த்திய சொற்பொழிவு, நாட்டிலுள்ள பலதிறப்பட்ட கட்சியினர்க்கும், பெரும்பான்மையும அதிருப்தியையே அளித்துளது எனக்கூறலாம். அன்னார் பேச்சு, ஆங்கில அரசாங்க உத்தியோக வருக்கத்தினர் பலருடைய ஆதரவையும் பெற்று விட்டதால், அதில் தொனிக்கும பொருளே ஆங்கிலேயரது உள்ளக்கிடக்கை என்பதும், தெள்ளிதிற் புலனாகும. இரண்டொரு யாண்டுகளுக்கு முன்னர், நமது ஒற்றுமை வலிவைக்கண்டு அஞ்சிய அரசாங்கத்தாரே, இந்நாளில், நமது வேற்றுமையாம் வலியின்மையைக்கண்டு களித்து முற்றிய மிடுக்குக்காட்டுவதும், தெற்றெனத் தெளியக்கிடக்கிறது. ஆதலின், நமது குலையா ஒற்றுமையே, ஆக்க அழிவு வேலைகளின் திறமையே, அஞ்சா நெஞ்சமே, ஆங்கில

அரசாங்கத்தினது முற்றிய மிடுக்கை, செருக்கை, திருப்பவல்லன என்பதை, ஒவ்வொருவரும் அறிந்து ஒழுகல் வேண்டும்.

நமது நாட்டின் தற்கால நிலைமை மிகவும் நெருக்கடியாக இருக்கிறது. மேடைப் பிரசங்கங்களும், பத்திரிகை ஆரவாரங்களும், இந்நாளில் பெரும் பயன் பயவா. வேண்டுவது வேலைத் திறனே. ஆதலின், தேசபந்து ஏற்படுத்திக் கொடுத்த அரிய சந்தர்ப்பத்தை ஏற்றுக்கொள்ளாது தள்ளிய இந்தியா மந்திரி பேச்சுக்கு எதிர் முழக்கமாக, நாம் உடனே செய்யவேண்டுவனவாய வேலைகள் சில உள. அவை யாவையெனின்:

'சுயராஜ்யக் கட்சி'யினர், எவர் சூழ்ச்சிக்கும் சோதனைக்கும் இடங்கொடாது, அதிகாரவர்க்க வீழ்ச்சி வரை, எக்காரணம் பற்றியும், ஒத்துழைப்பை மேற்கொண்டு உழலாது, ஒத்துழையா முழக்கஞ்செய்து, உரம் பெற்று வளர்ந்து ஓங்குதல் வேண்டும். ஒத்துழைப்பின் பயனின்மையைத் தெற்றெனத் தெளிந்த பின்னரும், மீண்டும் அச் சேற்றில் வீழ்வது நலம் பயக்குமோ? அது பலம் பெற வேண்டியிருப்பதன் அவசியத்தை நோக்கி, பல நன்மக்களும், அக்கட்சியிற் சேர்தல் வேண்டும். எனினும், உள்ளொன்றும் புறமொன்றும் வைத்து, 'ஒற்றுமை' என்னும் போலிப் பறை கூவி, தேர்தலில் எளிதில் வெற்றி பெறுவதை உள் நோக்கமாகக் கொண்டு, வாசா ஞானம் பேசும் வஞ்சகச் சூழ்ச்சியினரும், 'சுயராஜ்யக் கட்சி'யில் சேர்ந்து பின்னால் விபத்து விளையாவாறு எச்சரிக்கையாக இருத்தல்வேண்டும். மாறுதல் வேண்டாதாரைப் போன்றே, மற்றும் பல நாட்டுப்பற்றுள்ள நன்மக்களும், 'சுயராஜ்யக் கட்சி'க்கு இயன்றளவில் ஆதரவளித்து, அதன் செல்வாக்கைப் பெரிதும் வளர்த்தல் வேண்டும். சட்டசபைக்குள் 'சுயராஜ்யக் கட்சி'யினரும், மற்றுமுள்ள சுதந்தர வேட்கையுடைய உண்மைத் தொண்டர்கள் வெளியிலும், தீவிர பலத்தோடு சீரிய வேலைகளைச் செய்தல்வேண்டும்.

இது காலை, அடிகள் முதலியோர் வெளியிட்டுள்ள அறிக்கைக் கிணங்க, காலஞ் சென்ற தேசபந்துவின் மிகப் பொருத்தமுள்ள ஞாபகச்சின்னமாய கிராமப்பிரசாரம் தீவிரமாக நடைபெறுதல் வேண்டும். நாட்டு நலத்திற்குச் சாலச்சிறந்த வேலைத்திட்டம், கிராம பிரசாரமேயன்றி நகர பிரசாரமன்று. உண்மையான — தெய்விக — அரசியலுக்கு, கிராமங்களே ஏற்ற வித்திடும் நற்புலன்கள். கிராமங்கள் சீர்திருத்தப் பெறுவனவாயின், நாடு தானே சீர்திருத்தப் பெறும்; நலம் விளைவதும் திண்ணம். மற்றும், அடிகளின் ஆக்க, அழிவு வேலைத்திட்டங்கள், உற்சாகத்தோடும் உறுதியோடும் செம்மையாக நடைபெறுவதற்குப் போதிய சாதனங்கள், கிராமங்களிலேயே பெரிதும் உள. பின்வரும் சந்ததியாரின் தூற்றலுக்கும், கொடுஞ் சாபத்

கட்கும், இலக்காக வேண்டி நேருவதை தடுக்கக் கருதினால்,—கிராமங்களில் கதாபிரசாரம், தீண்டாமை நீக்கம், ஸர்வ-ஜன-ஸமூஹ ஒற்றுமை முதலியவற்றைத் தீவிரமாக நடத்திவர உறுதிகொண்டு, ஒற்றுமைக் கவசம் பூண்டு, உண்மைப் படைதாங்கி, அஞ்சா வீறு கொண்டு, காந்தியடிகளைப் பின்பற்றி, உள்ளும் புறமும் ஒன்றுபட்டு, புறங்கூறல், அழுக்காறு, சோர்வு முதலிய உட்பகைகளை ஒழித்து, உண்மைத் தொண்டு செய்து வருவோமாயின், வெற்றி விளைவது முக்காலும் திண்ணம்.- தேச பக்தர்களே! கருதிய கருமங் கைகூடும் வரை தளராது உழைமின். பாரததேவி, அருள் புரிவாளாக.

> "ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே--தம்மில்
> ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே." —பாரதி

# இந்திய தேசியக் கல்வி

ஸ்ரீயுத லாலா லஜபதிராய்

(305-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## ஐந்தாவது அதிகாரம்

### இங்கிலாந்தில் கல்விப் பயிற்சி விஷயம் *

"ஒரு நாட்டின் மூலதனம் காசு பணம் அன்று; அந்நாட்டு ஜனங்களின் உடல் வலியும் மூளை வலியுமேயாம்".—கௌரவபூரண பிஷ்ஷர்.

ஐரோப்பிய மகாயுத்தத்தின் மத்தியிலே, தன் முழுப்பலத்தையும் பிரயோகஞ் செய்து பார்த்தும் நற்பயனைக் காணாமல், பிழைப்பமோ சாவமோ என்பது தெரியாமல், இங்கிலாந்து தவித்

* குறிப்பு—உலகத்திலே கல்விப்பயிற்சி முறைகளில் தேர்ந்த மேதாவிகளில் ஒருவரும், இங்கிலாந்திலே கல்வியிலாகா மந்திரியுமான கௌரவ பூரண பிஷ்ஷர் என்பவர், இந்தியாவை விட எவ்வளவோ கல்விப் பயிற்சி அபிவிருத்தியிற் சிறந்த இங்கிலாந்திலே நடைபெறும் முறைகளைப் பற்றிக் கூறியுள்ளவற்றை, இந்தியருக்கு ஓர் எடுத்துக் காட்டாக, லாலாஜி, இந்த அதிகாரத்தில் எடுத்துரைத்திருக்கிறார் அவற்றின் சாராம்சமே இதில் சுருக்கிக் கூறப்படும். —பார்.

துத் தத்தளித்துக் கொண்டிருந்த ஆபத்தான தருவாயிலே, கல்விப் பயிற்சி இலாகா மந்திரியாயிருந்த பிஷ்ஷர், ஒரு நாட்டின் வாழ்வுக்கும் சிறப்புக்கும் கல்விப் பயிற்சியின் அதிமுக்கியத்தை எடுத்தோதி வற்புறுத்தி, கல்விப் பயிற்சி முறைகளைச் சீர்திருத்துவதிலும், கல்வியை ஜனங்களுக்குள் ஆழ அகலப் பரவச் செய்வதிலும் கவனத்தைச் செலுத்தும்படி பாராளுமன்றத்தைத் தூண்டி, அவ்வண்ணமே செய்வித்தார். எவனானாலும் ஒருவன், தன் சமூகத்துக்கு உபகாரியாக உழைத்து வாழ்வதும், அல்லது உதவாக் கட்டையாகப் பிடுங்கித் தின்றுகொண்டு ஜீவிப்பதும், பெரும்பாலும் அவன் கல்விப் பயிற்சியைப் பொறுத்தது தான், அதனால் விளையும் பலன்தான் என்பது, அவர் கோட்பாடு. 'கல்விப் பயிற்சியானது, நடுத்தர உயர்தர ஜனங்களுக்கு மாத்திரமே ஏற்றது; அவர்களுக்காகப் பாடு படும் கீழ்த்தர ஜனங்களுக்கு நல்லதன்று' என்று கூறும் சிலருடைய அபிப்பிராயத்தை, அவர் வெறுத்துத் தள்ளுகிறார். "ஒருவனுக்கு இயற்கையில் அமைந்துள்ள மனம் மொழி மெய்களின் சக்திகள் எல்லாவற்றையும் வெளிப்படுத்தி விருத்தி செய்து, தனக்கு உபயோகமாகத் தனக்கும் தன் குடும்பத்துக்கும் வேண்டியவற்றைத் தானே சம்பாதித்துப் பிழைப்பது மாத்திரமன்றி, தான் வாழும் சமூகத்துக்கும் அவன் உபயோகமாகும்படி செய்வதுதான் கல்விப் பயிற்சியின் கடமை; கல்விப் பயிற்சி வாழ்க்கைப் பயிற்சிதான்; ஆத்மா ஞான வொளியை நாடுவதும், எவனானுமே அவனவன் இயற்கைச் சக்திக்கேற்றபடி பெருமை எய்துவதும், கல்விப் பயிற்சியின் விளைவுக்களே; பரந்த கல்விப் பயிற்சி இல்லாமல், விவேகமுள்ள பொதுஜன நாயகம் அமையாது. கல்விப பயிற்சி என்பது, சிறுவயதுக்குரிய ஒரு நோயன்று; மூத்தார் இளையாருக்குச் செய்ய வல்ல உதவிகளி லெல்லாம் பேருதவி, கல்வியில் பயிற்றுவதேயாம். இப்படிப்பட்ட கல்வி, புஸ்தகங்களைக் கொண்டு மாத்திரம் புகட்ட முடியாது; இலக்கியப் பயிற்சியோடு, கை கால் கண் மூக்கு செவி வாக்கு முதலியவற்றையும் பழக்கவேண்டும்; வெளியுலகைக் கவனித் தறியும்படி புதிய சாளரங்களை அமைக்கவேண்டும். இவ்வாறு கல்வி போதனை முறைகளை விருத்திசெய்து, கல்வியறிவைப் பொது ஜனங்கள் எல்லோர்க்குள்ளும் பரப்புதற்கு வேண்டிய திரவியத்தை, இராசாங்கத்தார் செலவிடவேண்டும். இதன் பொருட்டு நேரும் எவ்வளவு செலவுக்கும், துரைத்தனத்தார் அஞ்சவோ, பின்வாங்கவோ, கூடாது. நாட்டில் வசிக்கும் ஆண்கள் பெண்கள் ஒவ்வொருத்தரும், தனக்குத் தனக்கு இயன்ற மட்டும் முழுப் பயிற்சியைப் பெறும்படி உதவுவது, துரைத்தனத்தின் கடமையாகும்." பிஷ்ஷரின் கொள்கைகள் இவை.

இவ்வண்ணம் கல்விப் பயிற்சியின் இலக்ஷியத்தையும் துரைத்தனத்தாரின் கடமையையும எடுத்துக் கூறிய பின்பு, இங்கிலாந்திலே துரைத்தனத்தார் தம் கடமையை நன்கு செய்யவில்லையென்றும, லக்ஷக்கணக்கினரான ஆண்களும் பெண்களும, போதிய கல்விப் பயிற்சியில்லாமையால், வாழ்க்கையின் முழுப் பலனைப் பெறாது வீணே காலங்கழிக்கின்றனர் என்றும், அவர் குறைகூறுகிறார். பிஷ்ஷரின் கொள்கைப்படி, மனுஷ ஜன்மம் எடுத்த ஒவ்வொருவருக்கும், சாபல்யத்தோடு கூடிய சம்பூர்ண வாழ்க்கை பிறப்புரிமையாகும். இப்படி ஜனங்கள் வாழ்வதனால் நாட்டுக்கும் இராசாங்கத்துக்கும் உண்டாகும் க்ஷேமலாபங்கள் எல்லாம் ஒருபுறமிருக்க, மனிதராய்ப் பிறந்ததனாலேயே ஒவ்வொருவருக்கும் இந்தச் சுதந்திரமுண்டு. சமூக நன்மையை நாடி எல்லோரும் உழைத்து வாழவேண்டும்; சமூக நன்மையின் பொருட்டுச் சிலர் உயிரையும் விடவேண்டிவரும்; இதனால், சமூக நலத்துக்காக வேனும், மகா ஜனங்களை மூடிக்கொண்டிருக்கும் அஞ்ஞான இருளைப் போக்கி, அவர்களுக்குள் ஞான வொளியை விளங்கச் செய்வதில், இராசாங்கத்தார் அக்கறைகொண்டு முயலவேண்டும்.

ஐரோப்பிய மகா யுத்த காலத்தில, கல்விப் பயிற்சி சம்பந்தமாக, இங்கிலாந்திலே, ஆண்டுகளுக்கு அறுபதுகோடி ரூபா செலவிடப்பட்டு வந்தது. 'அது போதாது, அதிகப் பணம் செலவிடவேண்டும்' என்று, பிஷ்ஷர் மன்றாடி வாதஞ் செய்து, அவ்வாறே கல்விச் செலவைப் பெருக்கினார். 'கல்விப் பயிற்சியில் பணத்தைச் செலவிடுவது, பலமடங்கு இலாபத்தைத் தரும துறையில், வாணிப முறையில, பணத்தை பலன் படுத்துவது போல் மட்டுமன்று; அளவிறந்த க்ஷேம லாபங்களைப் பின்னுக்குத் தரும் ஒரு காப்புமுறை (இன்ஷூரன்ஸ்) போலுமாம. ஆதலால், இவ்வளவு பணம் நம்மால் இவ் விஷயத்தில் செலவிட முடியுமா என்று மட்டும கவனியாமல், இவ்விஷயத்தில் இப்படிச் செலவிடாமல் நம்மால் இருக்க முடியுமா, செலவிடாவிட்டால் என்ன ஆபத்து நேரக்கூடும் என்று, முன் ஆலோசனை செய்யவேண்டும்,' எனகிறார்.

ஐரோப்பிய மகா யுத்தத்தின் மத்தியிலே, 1917-ம் ஆண்டிலே, கல்விப் பயிற்சிச் சீர்திருத்தத்தின் பொருட்டு, பிஷ்ஷர், பாராளுமன்றத்தில் ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார். அதையொட்டி, அந்தச் சபையிலும், பிறவிடங்களிலும் அவர், பேசியதிலிருந்து, சில விஷயங்களை எடுத்துக் கூறுவோம்.

ஒரு நாட்டின் செல்வங்கள் எல்லாவற்றினுஞ் சிறந்த செல்வம், அந்நாட்டு ஜனங்களின் தேக பலமும் மூளை வலியுமாதலால், எவ்விதத்தாலும் அவை வீண் போகாமல் சிக்கனஞ் செய்து காப்பாற்றிச் சிறக்கச் செய்யவேண்டும். முதலாவது, கல்விப் பயிற்சிக்

கும் சரீர ஆரோக்கியத்துக்கும் பலத்துக்கும் நெருங்கிய சம்பந்த முண்டு. அதனால், 1907-ம் ஆண்டில், பள்ளிக்கூட வித்தியார்த்தி களைப் பரிசோதிப்பது பார்த்து, வேண்டியவாறு அவர்கள் சரீர சௌக்கியத்தை விருத்தி செய்வதற் கென்றே வைத்தியர்களை நிய மித்தது, பெருநன்மைக்கிடமாயிற்று. வித்தியார்த்திகளின் நோய் களையும பலக்குறைவுகளையும் கண்டுபிடித்து, சரீர சுகத்தையும் திடத்தையும் விருத்தி செய்வதற்கு, இது அநுகூலமாயிற்று.*கல்வி போதனை முறைகளெல்லாம், வித்தியார்த்திகளின் சுகவீனங்களா லும் பலவீனங்களாலும முழுப்பலன் பெறுமற் போவதை இதனால் அறிந்துகொண்டு, அதற்கேற்ற பரிகாரங்களை நாடி நிவர்த்திசெய் வது சுலபமாயிற்று. * * * அவரவர் மனப்பான்மைக்கேற்றபடி, வித்தியார்த்திகளில் சிலர் கணிதத்திலும, சிலர் சரித்திர ஆராய்ச்சியிலும், சிலர் பாஷைப் பயிற்சிகளிலும், சிலர் பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியிலும், பலவிதத் திறமைகள் உள்ள வர்களாயிருப்பர். இவ்வண்ணம இயற்கையில் அமைந்துள்ள மதியூகத்தையும் மனபபொருத்தத்தையும அறிந்து, அவரவர்க் கேற்ற துறையில் பயிற்றுவித்தல், இரண்டாவது படியாக, பெரும் பயன் தருவதாகும். இப்பொழுது நடைபெறும் முறையிலோ, இதற்கு வழியே யில்லை * மூன்றாவது அம்சம் யாதெனில், செல்வர்கள் ஏழைகள், பெரியோர் சிறியோர், பிரபுக்கள் குடியான வர், யஜமானர் வேலைக்காரர், ஆண்கள் பெண்கள் என்பதின்றி, எல் லோருக்கும் வோட்டுரிமை அளிக்க வேண்டும் என்பது போலவே, எல்லோருக்கும் கல்விப் பயிற்சி அத்தியாவசியம் என்னும் உணர்ச் சியும், யுத்தத்தின் பலனாக உண்டாயிருக்கின்றது. படிபபு முறை களில சிறநத நாட்டினரே யுத்த முறையிலும் சிறந்து திகழ் கின்றனர். இதனால், நாட்டிலுள்ள ஆண் பெண் ஒவ்வொரு குழந் தைக்கும், திட சரீரமும கல்வியறிவும் இருக்கும்படி செய்வது, அவசியமாய் விட்டது. ஐந்து அல்லது ஆறு வயது வரை படிப் பித்தற் கென்று சிசுபள்ளிகள் ஏற்படுத்த வேண்டும். அப்பால 14 வயது வரை, ஏழைகளான பெற்றோருக்கு உதவியாக ஏதாவது வேலை செய்வது என்பதின்றி, ஒவ்வொரு குழந்தையும் ஆரம்பக் கல்விச்சாலையில் படிப்பதைக் கட்டாய மாக்க வேண்டும். அதற்குப் பின், தினந்தோறும் சிலமணி நேரமேனும் (வயிற்றுப்பிழைப்புக் காக வேறு வேலைகள் செய்வோரும்) கல்வி கற்பதற் கேற்ற கல்விச் சாலைகளை ஏற்படுத்தி, ஏழைகள் அப்படிக் கற்பதைக் கட்டாயமாக்க வேண்டும். ஆரம்பக் கல்வியின் மேல்வகுப்புக்களை ஒழுங்குசெய்து, குழந்தைகளின் சரீர சௌக்கியத்தையும் திடவளர்ச்சியையும் கவனித்தற்குரிய ஏற்பாடுகளைச செய்யவேண்டும். பதினன்கு

* இப்படிப்பட்ட ஏற்பாடு இன்னும் இந்தியாவி லில்லை.

வயதுவரை எந்தக்குழந்தையும் எவ்வித (ஜீவனோபாயத்) தொழிலிலும் வேலைசெய்யக் கூடாதென்று ஏற்படுத்தி, சரீர வளர்ச்சியிலும் கல்விப் பயிற்சியிலுமே முழுக்கவனத்தையும் காலத்தையும் செலவிடும்படி செய்யவேண்டும். ஆத்மா, புத்தி, சரீரம் என்னும் மூன்று துறைகளிலும் முழுமனிதனையும் பயிற்றுவித்து, ஆண்கள் பெண்கள் அனைவருக்கும் பொதுவான சில அம்சங்களைத் தன்னுள் அடக்கிக்கொண்டு, அவரவர் மனோபாவத்துக்கும் புத்திகோசரத்துக்கும் ஏற்ற வெவ்வேறு துறைகளில் அவரவர்களைச் செல்லவிட்டு, ஒவ்வொருவரும் தன்னாலியன்ற முழு நன்மையையும் பெறும்படிசெய்யும் ஒரு கல்விப் பயிற்சி முறையைக் கண்டுபிடித்தல், இக்கால நாகரீகத்துக்கு அசாத்தியமன்று கல்விப்பயிற்சியில் செல்வருக்குப் பொருந்துவது ஏழைகளுக்கும் பொருந்தும். தற்காலத்திலே தொழில்கள் மேற்செலலும் தோரணையில், இத்தனை வயது வரை சிறுவர் சிறுமிகள் தொழிற்சாலைகளின் வேலைசெய்யக் கூடாது என்று துரைத்தனம் நடுப் புகுந்து தடுத்துக் கல்விப் பயிற்சியைக் கட்டாய மாக்குவது, அவசியமாய் விட்டது. இப்படிச் செய்வது, தற்சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாகாது. பரந்த பயிற்சியுடன் விரிவான சுதந்திர ஞானத்துக்கு முளைப்பிடிப்பதேயாகும். இதனால், ஜனங்களுக்குள் அறியாமை துன்பம் கெட்ட நடத்தை நோய் முதலியன குறையும். ஜனசமூகத்திலே புள்ள வாலிபருக்குப் படிப்பே முதற்கடமை; சமபாதிப்பது, அதற்கடுத்த படியே; இந்த நியாயம், எல்லாருக்கும் பொது. தற்காலத்திலோ, செலவர்கள படிக்கிறார்கள், ஏழைகள் சம்பாதிக்கிறார்கள். கல்விப் பயிற்சி என்பது, முதியோர் இளையோர்க்கு இறுக்க வேண்டியகடன். செல்வர் ஏழைகள் என்பதைப பாராட்டாமல், நம்மால் கொடுக்ககூடியமட்டு ?, இளையோரால் பெறக்கூடியமட்டும், கல்விபபயிற்சியைக் கொடுத்தே தீரவேண்டும். * * * புஸ்தகங்களிலிருந்து யாதொரு பயனையும் பெறாமல், சங்கீதம் சித்திரங்களிலிருந்து எவ்வித ஸந்தோஷத்தையும் அடையாமல, சாதாரணமான இயற்கை அழகுகளைக் கண்டு ஆனந்தத்தை அநுபவியாமல், இப்பொழுது லக்ஷக்கணக்கான புருஷரும் ஸ்திரீகளும் நமக்குள் இருக்கிறார்கள். இரும்பாலும எஃகாலுஞ் செய்த இயந்திரங்களில் ஈடுபட்டு, தங்கள் வாழ்நாளை ஓரேவிதமான வேலையில் ஓரேவிதமாய் இவர்கள் கழிக்கிறார்கள். தாங்கள் வேலைசெய்யும் இயந்திர சக்திகளின் சூக்ஷ்மங்களை யூகித்தறிந்து அநுபவிக்கும் சாஸ்திர ஞானமும், இவர்களுக்கு இருப்ப தில்லை; ஒழிவு நேரங்களை வேறு விதமாய், மனோரம்மியமாய், உகந்து கழிக்கும் சக்தியும், இவர்களுக்கு இருப்ப தில்லை; இவர்கள் வாழும் வாழ்க்கையிருளை, காவியங்கள் கலைகளின் ஒளி, ஒரு சிறிதும் துலக்குவ தில்லை; மனோபாவ

ஸ்பரிசமே இவர்களுக்கில்லை; நம்மைச் சூழ்ந்துள்ள அதிசயகாட்சிகள் இயற்கை வனப்புக்கள் சிருஷ்டியற்புதங்கள் ஒன்றையும் ஒருசிறிதும் இவர்கள் உணர்ந்து களிப்பதேயில்லை. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, 'இப்படியுமுள்ள ஒரு நாகரிகத்தைக் கொண்டு நாம் திருப்தியடையலாமா? நமது பின்னோரேனும், இதனினும் ஆனந்தகரமான, பயிற்சியில் சிறந்த, பலதிறப்பட்ட ரஸானுபவங்கள் நிறைந்து விரிந்த வாழ்க்கையை வாழும்படி செய்வது நமது கடமையில்லையா? என்னும் எண்ணங்கள் என் (பிஷ்ஷர்) மனத்தில் எழுகின்றன.

முடிவில் அவர் சொல்வதாவது: "இந்த மசோதா செல்வர்களுக்காக கொண்டுவரப்பட்டதன்று; அவர்களுக்குப் போதுமான கல்விப் பயிற்சி சாதனங்களும் வசதிகளும் இப்பொழுதே இருக்கின்றன. வேலைசெய்து பிழைக்கும் சாதாரண ஜனங்களுக்காக ஏற்பட்டதே இது. இந்நாட்டு ஜனங்களின் குழந்தைகள், கல்விப் பயிற்சியினால் எல்லா வழியிலும் சம்பூரண வளர்ச்சியை அடைந்து, அதனால் முழு நன்மையையும் பெறுவதுதான், இந்த மசோதாவின் நோக்கம். இந்த யுத்தத்தின் கொடுமைகளில் ஒன்று, முதியோர் தீர்மானித்த வழியில் இளையோர் உயிரை விடுவதாயிருக்கிறது. இதற்குப் பதிலாக, வருங்காலத்து வாலிபர்களேனும் இந்நாளினும் அதிகமாகக் கல்விப் பயிற்சியைப் பெற்றுச் சிறக்கும்படி செய்வது, முதியோராகும் நமது கடமையன்றோ? * நம்முடைய குழந்தைகளும், நம்முடைய குழந்தைகளின் குழந்தைகளும் வாழப்போகும் வருங்காலம், இப்பொழுதினும் மிக்க கஷ்டமானதாயிருக்குமென்பது திண்ணம். அந்தக் கஷ்டமான காலத்திலே, நமது பின்னோர்கள் தக்கபடி போராடிச்செயம்பெறும் வழியை இப்பொழுதே ஆலோசித்து ஏற்படுத்திவிடுவது, நமது கடமை என்பதில் ஐயமேயில்லை."

குறிப்பு—மிகச்சிலராயிருந்தும், தமது கல்விப் பயிற்சியின் மேன்மையினாலும் திறமையினாலும், பலகோடியினரான நம்மையும், உலகத்திலே வேறு பல நாட்டினரையும், அடக்கி ஆண்டுவரும் ஆங்கிலேயர் வாழும் இங்கிலாந்தைப் பற்றியே இவ்வளவு அதிருப்தியோடும் கவலையோடும் ஆத்திரத்தோடும் பிஷ்ஷர் பேசுகின்றனரே; இனி, நம்ம இந்தியாவையும், அறியாமைச் சேற்றில் மூழ்கி மூச்சுத்திணறித் தவித்துக்கொண்டிருக்கும் பாமர ஏழைகளும் பராதீனர்களுமான இந்தியர்களின் கதியையும் பற்றி, என் சொல்வது! கல்விப் பயிற்சியைத் தவிர வேறு விமோசன வழி நமக்கேது?

(தொடரும்)

# வாழ்விலும் தாழ்வு.

" அரசர் முடித்தலை அயர்ந்துறங்காது !

என்பது, மக்களின் மனோபாவத்தைத் தெளிவா யுணர்ந்த ஷேக்ஸ்பியர் கவீந்திரரின் வாக்கு. உலக வாழ்க்கையிலே, இன்பமும் துன்பமும், அவரவர் அந்தஸ்தையும் செல்வ நிலைமையையும் பொறுத்த தன்று என்பதை, யாவரும் அறிவர். இம்மட்டோ! கவலை யற்ற சுகத்தை, செல்வர் மாளிகைகளில் விட ஏழைகளின் குடிசைகளில்தான் அதிகம் காணலாகும் என்பாரும் உளர். ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளாக இந்தியாவை ஆண்டு வந்திருக்கும் பிரிட்டிஷ் கவர்னர்—ஜெனரல்கள், ராஜப் பிரதிநிதி (வைஸ்ராய்) களில, இயற்கை யறிவாலும செயற்கைத் திறமையாலும் மிகச்சிறந்த ஒருவர், கர்ஸன் பிரபு. அவர் எழுதி யுள்ள "இந்தியாவின் அரசாட்சி" என்ற நூலிலே, 'இந்திய ராஜப்பிரதிநிதிக்குச் சமமான பேரதிகாரி பிரிட்டிஷ் சக்ராதிபத்தியத்திலே வேறிலலை என்பது வெளிப்படைத் தோற்ற மாயினும், இந்த ராஜப்பிரதிநிதிகளில பலர் பட்டுள்ள துக்கமும் கஷ்டங்களும், கொஞ்ச மல்ல' என்று எடுத்துரைத்திருக்கிறார். 'வாத்தியங்களும் பீரங்கிகளும் முழங்கி அதிரும் ஆடம்பரக் காட்சியின் நடுவே, முப்பத்திரண்டு கோடி ஜனங்களின தலைமை பூண்டு விளங்கும் இராஜப் பிரதிநிதிகளின் இருதயங்களும் இடிந்தேங்கி வருந்திய துண்டு' என்கிறார். உதாரணங்களாக:—

(1) ஆங்கிலர் ஆட்சியை இந்தியாவில் ஸ்தாபித்த மூல புருஷரான க்ளைவ் பிரபு, இங்கிலாந்திலே தனக்குண்டான இம்சைகளைப் பொறுக்க முடியாமல், தற்கொலை செய்து கொண்டார்.

(2) முதலாவது கவர்னர் - ஜெனரலான வாரன் ஹேஸ்டிங்ஸ், உயர் பதவியை விட்டு நீக்கப்பட்டது மன்றி, பார்லிமென்டிலே குற்றம்சாட்டப்பட்டு, ஏழாண்டு கேஸ் நடந்து, மனமிடிந்து வருந்தினர்.

(3) வெல்லஸ்லி பிரபுவும், இவ்வாறே வேலையை இழந்து பழிப்புற்றனா; குற்றப்பத்திரிகையை அரிதில் தப்பினர்.

(4) முதலாவது மிண்டோ பிரபு, அவமானமாய் வேலையை இழந்தனர்.

(5) ஹேஸ்டிங்ஸ் பிரபு, வேலை நீங்கிய பின், அவமதித்துப் பழிக்கப் பட்டனர்.

(6) ஆம்ஹர்ஸ்டு பிரபு, ராஜினாமா கொடுத்துத் தப்பித்துக் கொண்டனர்.

(7) ஆக்லண்டு பிரபு, அவ்வாறே ராஜீ நாமா கொடுத்துத் தப்பினர்.

(8) மேயோ பிரபு கொலையுண்டனர்.

(9) எல்லன்ப்ரோ பிரபு, வேலையை விட்டு நீக்கப்பட்டு, அவமானமடைந்தனர்.

(10) நாத்ப்ரூக் பிரபு, மனஸ்தாபத்தினால் வேலையைவிட்டு நீங்கினர்.

(11) லிட்டன் பிரபு, வேலையை இழக்குமுன் தானாகவே நீங்கிக் கொண்டனர்.

(12) மற்றொரு ராஜப் பிரதிநிதியும் (கர்ஸன் பிரபுவே), இவ்வாறே மனம் நொந்து வேலையை விட்டு நீங்க வேண்டியதாயிற்று. மேலே கூறியவை உத்தியோக முறையில் ஆசா பங்கமும் அவமானமும் ஆபத்தும் நேர்ந்ததற்கு உதாரணங்களாம். இவையன்றி சரீர சௌக்கியத்திலும் குடும்ப வாழ்க்கையிலும் ராஜப் பிரதிநிதிகளிற் சிலர் பட்ட துயரங்களுமுண்டு. உதாரணங்களாக:—வாரன்ஹேஸ்டிங்ஸ், மிண்டோ பிரபு, டால்ஹௌஸி பிரபு, கானிங் பிரபு முதலியோர், நோய்களினாலும் பலவீனத்தாலும் மிக்கு வருந்தினர். எல்ஜின், கார்ன்வாலிஸ், மேயோ பிரபுக்கள் உயிரையே இழந்தனர். ஹார்டிஞ்ச் பிரபு வெடிகுண்டுக் கொலைக்கு மயிரிழையே விலகித் தப்பினார். டால்ஹௌஸி, கானிங், கர்ஸன் பிரபுக்கள், இந்தியாவில் வசித்ததன் பலனாக, தங்கள் ஆசை மனைவியரை அகால மரணத்தால் இழந்து துயருழந்தனர். இந்தத் துக்கம் எவ்வளவு கொடியதென்பதை, பின்வரும் வரலாறு விளக்கும்: ஹேஸ்டிங்ஸ் பிரபு சாகும் பொழுது, தன் மனைவி மீதுள்ள அளப்பருங் காதலினால், தன் வலது கையை மட்டும் வெட்டி வேறாகச் சேமித்து வைத்திருந்து, தன் மனைவியும் இறந்த பின், அவள் கையோடு சேர்த்து, ஒரே கல்லறையிற் புதைக்க வேண்டுமென்று, உருக்கமாகத் தன் உயிலில் எழுதி வைத்திருந்தார். அவ்வாறே அவர் கை மட்டும் ஒரு தனிப் பெட்டியில் 14 ஆண்டுகள் சேமித்து வைத்திருந்து, அவர் மனைவி இறந்தபோது, அவள் சவப் பெட்டியில் அடக்கஞ் செய்யப் பட்டது.

முடிவில், கர்ஸன் பிரபு, 'இவற்றையெல்லாம் கவனித்தால் இந்திய ராஜப்பிரதிநிதியின் சிம்மாசனத்தின் மேல், பீதாம்பர மேற் கட்டி மாத்திரம் இலங்கவில்லை; கண்ணீர் மஞ்சு கவிந்திருப்பதையும் காணலாம்' என்று, எழுதியிருக்கிறார்.

இவ் வண்ணம் புலம்பி வருந்துதல் ராஜப் பிரதிநிதிகளின் கஷ்டங்களையும், பொதுவாய் இந்நாட்டை யாளுவதில் வெள்ளையர் தாங்கிவரும் பெருஞ்சுமையின் பளுவையும் எடுத்துக்காட்டும் பொருட்டே என்னலாம். இத்தனை இடையூறுகளுக்கும் துயரம்

களுக்கும் உள்ளாவதாயிருந்தும், ராஜபிரதிநிதி ஸ்தானத்துக்கு 'நான்,' 'நீ' என்று மேல்விழுந்து போட்டி போட்டுக்கொண்டு, ஆங்கிலப் பிரபுக்களில் மிகச் சிறந்தோருமே வருவதும்; வந்து, இந்தத் துபரங்களை அநுபவித்த பின்புங்கூட, கிரமப்படி யுள்ள ஐந்தாண்டுகளோடு திருப்தி யடையாமல், பின்னும் சிலவாண்டுகள் தம் ஸ்தானத்தை வகிக்க விரும்பி வருவதும, விந்தையாய்த் தோன்றுகின்றது. இந்தியாவுக்கு வராமல் இங்கிலாந்தில தானே சுக ஜீவிகளாய் வசிக்கும் பிரபுக்கள, நோய்கள் பலவீனம முதலியவற்றை அடையாது, அவர்களும அவர்களுடைய காதல் மனைவியரும் சிரஞ்சீவிகளாகவே வாழ்கின்றன ரென்று, கர்ஸன் பிரபு துணிந்து கூறுவரோ? கூறினும், எவரேனும நம்புவரோ? இராஜப் பிரதிநிதிகள் கிடக்க, சாதாரண உத்தியோகங்களில் வருவோரும், வியாபார நிமித்தம் வருவோரும், இத்தனை துன்பங்களுக்கும் ஏதுவாகும் இப்பாழ நாட்டுக்கு வந்து, ஏனோ அவதிப் படுகின்றனர்? காட்டு மிராண்டிகளான இந்தியர்களை மனிதராக்கி, சத்தியவேத மாகிய பைபிளை அவர்களுக்குப் போதித்து, தங்களுடைய உயர்தர நாகரிகத்தைப் பரவச் செய்யும் பொருட்டே போலும்? அம்மம்ம! என்ன கடமைப் பற்று! என்ன பரோபகாரச் சிந்தை! தன்னைச் சரணடைந்த புறவின பொருட்டுத்துலையேறிய சிபிச் சக்கரவர்த்தியுந்தான், இவர்களுக்கு இணையாவரோ?

—மா,

---

பத்மாவதி சரித்திரம்

முதல் 2 பாகங்களும்—படங்களுடன்.
ஐந்தாம் பதிப்பு ரூ. 2—0—0

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

தட்சிண சரித்திர வீரர்

144-பக்கங்கள். 11-படங்கள்.

பண்டிதர்களும் சரித்திராசிரியர்களும் மெச்சும் நூல்! தேச பக்தியை வளர்ப்பது!

விலை 0—10—0; தபாற்கூலி 0—1—0;

பஞ்சாமிர்தம் ஆபீஸ்,
மயிலாப்பூர் - சென்னை.

கேரளத்தில்

# ஸம்ஸ்கிருத சுவடிகள்

ஸ்ரீ. R. அனந்தகிருஷ்ண சாஸ்திரி, சாந்தி நிகேதனம்.

கேரளம் பரசுராமனால் ஸ்தாபிக்கப் பட்டது; அசோக சக்ரவர்த்தியின் சிலா சாஸனத்தில் பெயர் காணப்படுவது; ஆதி சங்கராசாரியரின் ஜனன பூமி. இதில் வந்து குடியேறின பிராமணர்கள், ருக்வேதத்தில் கௌஷீதகி சாகைக் காரர்களும், யெஜுர் வேதத்தில் தைத்தரீயததில் வாதூல ஸூத்திரக் காரர்களும், ஸாம வேதத்தில் ஜைமினீ சாகைக்காரர்களும ஆவார்; அதர்வ வேதப் பிராமணர்கள் இங்கே வந்ததாகத் தெரியவில்லை. இப்படிக் குடியேறின கேரளப் பிராமணர்களுக்கு நம்பூதிரிகள் என்ற பெயர் வழங்குகின்றது. கள்ளிக் கோட்டை ஜில்லாவிலும் கொச்சி ஸம்ஸ்தானத்திலுந்தான் இவர்களை அதிகம் காணலாம். அனேகமாக இவர்கள ஸம்பன்னர்கள்; வேத சாஸ்திரங்களைப் படித்து, யாகாதிகள் செய்வதே இவர்கள் தொழில். இவர்கள் குடியேறவரும பொழுது கொண்டு வந்த ஏடுகள், எந்த அக்ஷரத்தில் எழுதப்பட்டிருந்தன வென்று, இப்பொழுது ஊகிக்க முடியவில்லை. இப்பொழுதுள்ள ஏடுகளெல்லாம் மலையாள அக்ஷரத்திலேயே இருக்கின்றன. மங்களூர் முதல கோகர்ணமவரை காணப்படுகின்ற, நந்திநாகரமென்று கூறப்படும், எழுத்துக்கள் அடங்கிய ஏடுகள் ஒன்று கூட நம்பூதிரிகள் வீட்டில் காணப்படுகிறதில்லை. அப்படியே, தமிழ் தேசத்தில் வழங்கிவருகிற கிரந்தமென்கின்ற அக்ஷரங்கள் அடங்கிய ஏடுகளுமில்லை. எல்லாம் நல்ல மலையாள அக்ஷரங்களிலேயே தவிர வேறில்லை. பதம் செய்த பனையோலையை எழுத உபயோகித்தபடியினால், எல்லா விஷயங்களும் நல்ல ஏடுகளில் எழுதி, ஏடுகளை ரக்ஷிக்க இரண்டு புறத்திலும நல்ல அழகான பலகைகளையும் உபயோகித்து வந்தார்கள். படிப்புத் தவிர வேறு வேலைகள் நம்பூதிரிமார்களுக்குக் கிடையாததினால், ஏடுகளைத் தினந்தோறும் உபயோகப்படுத்தி, ஏடுகள், பூச்சி கரையான் முதலான ஜந்துக்களுக்கு இரையாகாமல் நன்றாகப் பாதுகாத்து வந்தனர். இப்பொழுது சுமார் பத்து வருஷகாலமாக, கலிதர்மத்தினால், உடனே மாறுதல் வந்து, ஏடுகளுக்கு ரக்ஷணை குறைந்து விட்டது;

படிப்பும் போய்விட்டது; நான் இருபது வருஷங்களுக்கு முன் சில கிரந்தங்கள் பார்க்க நம்பூதிரிகள் வீட்டிற்குப் போனபொழுது; அவர்கள் கிரந்தங்களைக் காட்டுவது அரிது; ஏடுகளையும் வீட்டிற்குள் பந்தோபஸ்தாக, மழை காற்று முதலானவைகள் படாத இடத்தில், பெட்டியில் வைத்திருந்தார்கள். எல்லாம் இப்பொழுது மாறிவிட்டது. இப்பொழுது ஏடுகள் இருக்கிற இடங்கள், அனேகமாக எலி முதலானவை வாசஞ் செய்கிற இடங்களும், சூரியன் மழை காற்றுக்கள் ஸஞ்சாரஞ் செய்யும் இடங்களுமாகும். சுமார் ஏழு வருஷங்களுக்கு முன், மதராஸ் கெவர்ன்மெண்டு லைப்ரரியிலிருந்து சில பண்டிதர்களை நியமித்து, அவர்கள ஸஞ்சாரஞ்செய்து, முக்கிய நம்பூதிரி வீடுகளிலிருந்து அனேக நல்ல ஏடுகளை நகலெடுத்துக் கொண்டு போனதினால், சில நல்ல ஏடுகள் ரக்ஷிக்கப்பட்டன. ஒவ்வொரு வீட்டிலும், ஏடுகள் சுமார், நூற்றுக்குமேல் இரண்டாயிரம் வரை இருக்கின்றன; ஆனால் எல்லாம் நாசமடைந்து வருகிறது. இன்னும் பத்து வருஷம் ஆனால், அனேகமாக ஏடுகள் இருந்த இடமே தெரிபவராது. ஏடுகளில அடங்கிய விஷயங்களோ, சொல்ல முடியாது; வெகு அபூர்வங்கள். சிலவற்றைத் திருவிதாங்கூர் ஸம்ஸ்தானத்தில் அச்சிட்டு வருகிறார்கள் எல்லா விஷயங்களையும் அச்சிட, உடனே யாராலும் முடியாது. என் லைப்ரரி யாத்திரையில், பரத கண்டம் முழுவதும் அடிக்கடி சுற்றுகிறதில், கேரளத்தில் அகப்படுகிற ஏடுகள் வேறு எவ்விடத்திலும் சேர்ந்து அகப்படுகிறதில்லை இவற்றை நிலை நிறுத்த ஒவ்வொரு ஸம்பன்ன தேச மதாபிமானிக ளிடத்திலும் நான் முறையிட்டுக் கொண்டுவருகிறேன் ஒருவராவது கவனிக்கிறதாகக் காண வில்லை.

ஏடுகளை ரக்ஷிக்கும் விதம — சுமார் ரூ. 20 ஆயிரத்திற்குள் கள்ளிக் கோட்டையிலாவது, பாலக்காட்டிலாவது ஒரு நல்ல கட்டடம் கட்டி, அதில் ரூ. 5 ஆயிரத்திற்குள் பீரோ முதலானவை செய்து வைத்து, பிறகு மாதம ரூ. 50 வீதம் ஒரு வித்வானும், அவர்கீழ் இரண்டு வேலைக்காரர்களும் வைத்து, ஒரு அபிமான கௌரவ கம்மிற்றியுடன, ரூ. 50 ஆயிரம் சாசுவத நிதியுடன், வேலை ஆரம்பிக்கவேண்டும. ஒரு லக்ஷம ரூபாவிருந்தால, அதிகம். பிறகு ஒவ்வொரு நம்பூதிரியின் வீட்டுக்கும்போய், அவர்கள் சம்மதத்துடன, அவர்கள் ஏடுகளை வாங்கிப் பரிசோதித்து, கயிறு முதலானவை போட்டுக் கட்டி, அவரவர்கள் பெயருடன், வெவ்வேறாக ஏடுகளை மேல்படி லைப்ரரியில் வைக்கவேண்டும். பிறகு ஏடுகளுக்கு ஒரு ஜாப்தா எடுத்து வைத்து, வருகிறவர்கள் பார்க்கும் படியும் காபி செய்யும்படியும் ஏற்பாடு செய்யவேண்டும். பணமிருந்தால், அபூர்வ கிரந்தங்களை அச்சிடவும செய்யலாம். நம ஆரியர்கள் கௌரவம், முன் சரித்திரத்தை வைத்து உண்டானது; சரித்தி

ரமோ, பழைய ஏடுகளில் எழுதியிருக்கிறது; அவை நசிக்க விட்டு விட்டால், நம் கௌரவம் போய்விடும். அது ஒன்றுதான் மீதமா யிருக்கிறது; அதுவும் போய்விட்டால், நமக்கு ஒருவிதமான இசை யும் கிடையாது. அதைக் கவனிக்கவேண்டும். தேச மதாபிமானி களே, கவனியுங்கள்! கவனியுங்கள்! ஸரஸ்வதிக்கு ஈன ஸ்திதி வந் தால், பிறகு என்ன இருக்கிறது? லக்ஷ்மியை எப்படியாவது சம் பாதிக்கலாம்; ஸரஸ்வதி நாசமடைந்தால், எல்லாம் நாசமே. ஆரி யர்களே, இதைக் கவனியுங்கள்!

# புராணங்கள்




ந்துக்களின் புராதனமான புனித கிரந்தங் களில் புராணங்கள் ஒரு பகுதி. அவற்றில் அநேகம் அச்சேறி யிருப்பினும், படிப் பதற்கு எளிதில் கிடைப்பதில்லை, ஆகை யால், பண்டிதர்களில் பலருமே, அவற் றின் பேர்களை யன்றி அதிகம் அறியார். சில பண்டிதர்களுக்கு, புண்ணிய காலங்களில் மகா ஜனங்கள் முன் வாசிக்கும் பொருட்டுப் பொறுக்கிச் சேர்க்கப்பட்ட பகுதிகள் மட்டும் தெரியும். எனவே, சாதாரண ஹிந்துக்களுக்குப் புராணங்களைப்பற்றி விசேஷமாய் ஒன்றும் தெரியாதென்று கூறவேண்டுவ தில்லை.

புராணங்களின் விஷயம் என்ன என்பதை, அமரஸிம்மனின் 'நாமலிங்கானுஸாஸனம' கூறும்; அஃதாவது, "உலகங்களின் ஸிருஷ்டி; தேவர்கள், வீரர்களின் பரம்பரை; மநுக்களின் ஆட்சி வரலாறுகள்; மநுசந்ததியார்களின் விருத்தாந்தங்கள்" என்பது.

சரித்திர ஆராய்ச்சி ஒப்புதற்குரிய விஷயங்கள் புராணங்களில் அதிகம் இல்லை என்றும்; சாதாரண ஜனங்களுக்காக முதலில் பிராகிருத பாஷையில் எழுதப்பட்டு, அப்பால், புத்தமதம் இந்தி யாவில் தலை சாய்ந்த காலத்திலே, அதை முழுதும தொலைத்து ஜனங்களுக்குப் பிராமண மதத்தில் பக்தியை வளர்க்கும் பொருட்டு, ஸம்ஸ்கிருத பாஷையில இந்தப் புராணங்கள் பெயர்த் தெழுதப்

* Abridged and adapted from an article in the *Quarterly journal of the Mythic Society*. Bangalore, by Mr. V. Venkatachala Ayyar, B.A., B.L., Vol. XIII-No. 3.

பட்டன என்றும், மேல் நாட்டு ஆசிரியர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். வைதிகப் பிராமணர்கள் புத்தமதத்தை ஒழிப்பதற்குச் செய்த யுக்திகளில் 'புராணங்கள்' ஒன்று; ஆகையால் புத்தமத கிரந்தங்களிலும் ஆசார அநுஷ்டானங்களிலும் நல்லனவா யிருந்தனவெல்லாம், தொன்று தொட்டே ஹிந்து மதத்துக் குரியனபோலத் தோன்றும்படி, இந்தப் புராணங்களில் சேர்த்து அமைக்கப்பட்டன மகா புராணங்களில் சில, ஜனங்களுக்குள் மௌட்டியத்தையும் மூட பக்தியையும் வளர்ச்செய்து, அவர்கள் மனங்களை அடிமைப் படுத்தி, தமக்குள் தாமே ஆலோசனை செய்து மெய் பொய்களை அறிந்து கொள்ளும் சக்தியைச் சிதைத்து, மேற் பார்வைக்கு மோக்ஷ மார்க்கத்தை விஸ்தரித் துரைப்பனபோலத் தோன்றினும் வாஸ்தவத்தில் அஞ்ஞானத்திலும் மூட பக்தியிலுமே ஆழ்த்திவிட வல்ல கிரந்தங்களாக, வேண்டுமென்றே எழுதப்பட்டன. இந்தப் புராணங்களில, எல்லாவித மூடபக்தியும், மூட வணக்கங்களும், வருஷ முழுதும் தினம் ஒன்றாகச் செய்யும்படி விவரித்து விளக்கப் பட்ட மூடக் கிரியைகளும் வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கின்றன; ஒளியும் இருட்டும், கடவுளும் கழிசடைகளும, கலந்து காண்கின்றன; மனிதருக் குள்ள ஆசாபாசங்களும் காமக் குரோத லோப மாகிய துர்க்குணங்களும் நிறைந்த, பலதிறப்பட்ட, மிகப் பல தேவர்களும் தேவிகளும் கூறப்பட்டிருக்கின்றனர். போதனை முறையில், தர்மோபதேசமாகச் சொல்லப்படும் உவமானக் கதைகளும், எடுத்துக் காட்டு விஷயங்களும், தற்காலத்தில் சில ஸினிமாப் படங்களினால் காண்பவர் மனங்களில் கெட்ட எண்ணங்கள் உதிப்பதுபோல, படிப்பவர் மனத்தைக் கெடுக்கத் தக்கனவா யிருக்கின்றன. உதாரணங்களாக; ஒரு பிராமண வாலிபன், சமீபத்தில் வைதவ்யம் அடைந்த தன்னைப் பெற்ற தாயினிடத்தில்தானே, அதுவும், அவள் தீண்டாத நிலைமையிலிருக்கும் பொழுது, பிரவேசிக்கிறான்; இந்தப் பாவம், ஒரு நதியில் ஸ்நானஞ் செய்தால் தீர்ந்துவிடுகிறது. வேசை வீட்டுக்குச் செல்லும் தூர்த்தன் ஒருவன் கையிலிருந்த தாம்பூலம், சாக்கடைக்குள் கை நழுவி விழுந்துவிடுகிறது; அப்பொழுது அவன், "க்ருஷ்ணார்ப்பணமஸ்து!" என்கிறான்; அதனால், அவன் இந்திர பதவியையும் போகத்தையும் அடைகிறான்.

இவ்வாறாக, இகத்தில் இன்பமும் பரத்தில் மோக்ஷமும், ஆறுகளில் மூழ்குவதாலும், விக்கிரகங்களை ஆராதிப்பதாலும, விருந்துகள் பட்டினிகளாலும் கிடைத்து விடுகின்றன; தவமோ தியானமோ அவசிய மில்லை. மனதுக்குச் சுத்தத்தையும் சாந்தியையும் அளித்து, மனோவிருத்தியையும் கிரியைகளையும் மேம்படுத்திப் புனிதமாக்கி, ஆத்மஞானத்தைத் தரும் சக்தி, இந்தப் புராணங்களி லில்லை.

புராணங்க ளெல்லாம், இவற்றுள் முக்கியமானவையேனும், வியாசர் இயற்றியன என்பர். இவை, மகா புராணங்கள் பதினெட்டு, உப புராணங்கள் பதினெட்டு என்பது, முது மொழி. சில புராணங்கள் மிகப் பெரியன: ஸ்கந்த புராணம் எண்பதினாயிரம் சுலோகங்கள் கொண்டது; பதும புராணம், அதற்கடுத்தபடி. இவை யன்றி, தல புராணங்கள் எண்ணிறந்தனவாம். இவைகள் நவீன சிருஷ்டிகளே, பொய்யான கட்டுக் கதைகளே ஆயினும், ஒவ்வொன்றும் ஒரு பழைய ரிஷியின் பேரால் வழங்குகின்றது. இவற்றைப் பற்றி இங்கே பேசுவ தில்லை.

மகா புராணங்களின் காலத்தை, இப்பொழுது துல்லியமாய் நிருணயிக்க முடியாது. இவற்றில் மூன்றைப் பற்றி விசேஷமாய்க் கூறவேண்டும். DR வில்ஸனும், அறிவகன்ற பண்டிதர்களில் சிலரும், ஸ்ரீமத் பாகவத புராணம், உண்மையில் புராதனமான தன்று, பிற்காலத்துக் கட்டுக் கதையே என்று, அபிப்பிராயப்படுகின்றனர்; இதில் பெரும் பகுதி, தேவி பாகவதத்தி லிருந்து எடுத்தெழுதியதே யாம். குல்பர்கா முகம்மதிய ராஜ சபையின் ஸம்ஸ்கிருத பண்டிதரா யிருந்தவரும், 'முக்தபோதம்' என்ற மிகச் சிறந்த வடமொழி இலக்கணத்தை இயற்றியவருமான மகாமகோபாத்யாய வோபதேவர் என்ற மகாவித்வான் எழுதியதே, பாகவத புராணம் என்பது, சிலர் கூற்று.

"ப்ரும்ம வைவர்த்த புராணம்", பிற்காலத்துக் கிரந்தமே என்கிறார் Dr. வில்ஸன். மகாபுராணங்கள் எல்லாவற்றினும் பிந்தியது, நவீனமானது, பிற்காலத்துப் புரட்டுக் கதையாவது, பவிஷ்ய புராணம் என்பது. இந்தப் புராணத்திலே, கி. பி. 18-வது நூற்றாண்டின் இறுதி வரை (அதாவது, 125 வருஷங்களுக்கு முன் வரை) நடந்த சங்கதிகளை யெல்லாம், "வியாசர்" எடுத்துரைக்கிறார்! கிறிஸ்தவ வேத நூலான பைபிளிலிருந்து ஆதாம் ஏவாள் நோவா முதலியோர் வரலாறுகளும், டில்லியில் ஆண்ட முகம்மதிய மன்னர்களின் சரித்திரங்களும், நாதர்ஷாவின் படையெடுப்புக்களும், சிவாஜி மஹா ராஜா, ஔரங்கஸீப் சக்கரவர்த்தி முதலியோர் விருத்தாந்தங்களும், ஈஸ்டிந்தியா கும்பெனியார் கல்கத்தாவிலும் பிறவிடங்களிலும் வேரூன்றி வளர்ந்தோங்கிய செய்திகளும், இந்தப்புராணத்திலே, திரிகால ஞானியான வியாசரால் கூறப்பட்டுள்ளன. இலங்கைப் போரிலே இராவண சங்கார காலத்திலே இராமருக்குப் பேருதவிகள் செய்து வரன்களைப் பெற்ற சில வானரங்களின் சந்ததியாரே இப்பொழுது நம்மையாளும் பிரிட்டிஷார் என்பது, இதன்படி, வியாச பகவான் கொள்கை. இப்படிப்பட்ட அதிசயமான புராணத்தை எழுதியவர் யாராயினும், அவர் மகா ஹாஸ்யரஸிகர், அருங்கலை விநோதி என்பதில் ஐய மில்லை; மற்றப் புராணங்களின்

யோக்கியதையை அறிந்தவராதலின், தான் எழுதப் புகுந்த நவீன புராணத்தையும் அவ்வண்ணமே எழுதி, "விபாசர் வாக்கை" நம் காலம் வரைக் கொண்டு வந்து விட்டார்!

ஆக்கினேய புராணம் ஒரு விதத்தில் விசேஷமானது: மற்றெல்லாப் புராணங்களின் சங்கிரகம் போல்வது. இவ்வாறு இதர புராண விஷயங்களைச் சுருக்கிக்கூறுவது மட்டுமின்றி, இராமயணத்தையும் மகா பாரதத்தையும் சுருக்கி யுரைக்கின்றது; தவிர, கவியியல் வாக்கியல் நாடகவியல் மொழியியல் இலக்கணம் முதலிய விஷயங்களைப் பற்றிய உபந்நியாசங்களும், அமரத்தின் ஒரு பகுதியும், இதில் அடங்கி யிருக்கின்றன. இந்தப் புராணத்திலே "இல்லாதன இல்லை" என்னலாம்! இப்படிப் பட்ட ஒரு கலம்பகத்தையும் மகாபுராணங்களில் ஒன்ருக மதிப்பதெப்படி? பாமர ஜனங்களை ஏமாற்றப் புகுந்தப் பண்டிதர்கள், எவ்வளவு அலக்ஷியமாய், விளையாட்டுத்தனமாய், வேலை செய்தார்கள் என்பதையே, இது விளக்குகின்றது.

இப்பொழுது நாம் புராணங்களில் வாசிப்பதெல்லாம், ஆதி தொட்டு அவற்றில் இருந்ததாகக் கொள்ளக்கூடாது. மற்றப் புராதனமான கிரந்தங்களில் போலவே இந்தப் புராணங்களிலும், நாளாவட்டத்தில் பல பகுதிகள் புதிது புதிதாய்ச் சேர்த்து நுழைத்தெழுதப் பட்டன. நீண்ட பெரிய அத்தியாயங்கள் பல, ஒரு புராணத்திலிருந்து மற்ருென்றில் பெயர்த்தெழுதப் பட்டன. பெரிய நூல்களுக்குப் பிரதிகள் எழுதுவது சிரம சாத்தியமாயிருந்த காலத்திலே, இந்தப் புராணங்கள் தலையெடுத்தன; ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு பிரதியே இருக்கும்; உள்ளதை உள்ளவரை சம்பூர்ண மாக்கிக்கொள்ள விரும்பின பண்டிதர்கள், இவ்வாறு ஒருபுராணத்தி லுள்ளதை மற்ருென்றில், பக்கம் பக்கமாய், தலைப்புக்களையும் பெயர்களையும் மாத்திரம் பெரும்பாலும் மாற்றி, எழுதி அமைத்துக் கொண்டனர். இதனுல், அதிக சிரம மின்றிப் புராணம் நிறைவேறியது; களவைக் கண்டு பிடிப்பதோ, அரிதாயிருந்தது.

குறிப்பு—இந்தக் கட்டுரையை இங்கிலீஷில் எழுதினவர், எந்தப்புராணங்களில் எந்த எந்தப் பாகங்கள் வேறு புராணங்களில் எந்த எந்த இடங்களில் காணப்படுகின்றன என்பதைப் பற்றி விவரமான அட்டவணை வரைந்து; இராமாயணமும் மகாபாரதமும் இவ்வாறு புராணங்களோடு சம்பந்தப்படும் இடங்களைக்குறிப் பிட்டு; உத்தர ராமாயணக் கதை, பிற்காலத்தில் நரசிம்ம புராணம், பதும புராணம் முதலிய சில கிரந்தங்களிலிருந்து தொகுத்தெழுதப்பட்டது என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிருர். இந்த விவரங்களை மூலப்பத்திரிகையில் காணலாம்.

மா.

# கப்பல் யாத்திரை

ஸ்ரீமதி M. லக்ஷ்மியம்மாள், B.A., Hon's (Lond) L. T., சென்னை.

இப்பொழுது கப்பல் மத்தியதரைக் கடலூடே போய்க்கொண்டிருக்கிறது. நேற்று ஸிஸிலித் தீவின் கரையோரத்தைக் கடந்து, மறுபடியும் கரை காணாத சமுத்திரத்தில் கப்பல் பிரவேசித்தபொழுது, முன் தட்டிலிருந்து சில பிரயாணிகள், "இடாலி! போய் வருகிறோம! யூரப்! விடை பெற்றோம்!" என்று கூவினார்கள். முதல் மூன்று நாள்கள் நாங்கள், ஜிப்ரால்டர் தாண்டும் வரையுந்தான, கடல் கொந்தளிப்பு மும்முரமாயிருந்தது. அலைவேகத்துக் குட்பட்டுச் சரிந்து நிமிர்ந்து தடுமாறிய ஆட்டம் ஓய்ந்து, கபபல் இப்பொழுது நேராக முன்னேக்கிச் செல்கிறது கண்ணுக் கெட்டிய வரை ஆகாய முழுதும் ஓரே பான்மையாய், முழு நீலமாய்த் தோன்றுகிறது. கடல் நீர், பேனாவை அதில் முக்கி எழுதும் ஆசையைத் தூண்டும் கருநீல மை வர்ணமா யிருக்கிறது.

மூன்றுமணிக் கொருதரம் ஏதாவது ஆகாரம் செய்தும், இடைவேளைகளில் கதை வாசித்தும், கடிதங்களை வரைந்தும், சீட்டு சொக்கட்டான் வட்டெறிதல் ஓடக்கிரிகெட் நடனம் முதலிய விளையாட்டுக்களாடியும், பிரயாணிகள் குதூகலமாய்ப் பொழுது போக்குகிறார்கள். சருவதா அங்குமிங்கும் ஓடி உழைக்கும் கபபல் வேலைக்காரர்கள் பாடு, வேறுவிதமே. அது, அவர்கள் தொழிலென்றும், எங்களால் அவர்களுக்காகும் உதவி ஏதுமில்லையென்றும், எங்கள் பாட்டில் பெரும் பாக்கியம் ஒன்றுமிலலை யென்றும் நினைத்துப் பார்த்தாங்கூட, கடல் மத்தியில், கபபலின் நெருக்க வாழ்க்கையில், "சிவிகை ஊர்வான் ஒருவன், தாங்குவான் ஒருவன் உளனாவது இவ்வுலகத்தின் தன்மை" என்ற வாக்கின் உண்மை துலங்கி, மனத்தை உறுத்துகிறது. இதோ, மறுபடியும் சாப்பாட்டு மணி அடிக்கிறது. சாதாரணமாய் ஒருநாள் கழியும் விதத்தை நினைத்துப் பார்த்தால், ஊண் கழித்தல் தான் எங்களுக்கு முக்கியமான பொழுது போக்கு என்று தோன்றுகிறது. காலை ஆறுமணிக்கு

வேலைக்காரி படுக்கை யறையில் கொண்டு வந்து கொடுக்கும் டீயை யும் பழத்தையும் பிஸ்கோத்ததயும வாங்கிச் சாப்பிட்டபின், ஸ்நா னம் செய்து விட்டு மேல் மாடிக்குப போய், ஒருவரை யொருவர் க்ஷேமம் விசாரித்துச சிறிது நேரம் முன் தட்டில் காற்று வாங்கி உலாவும்பொழுது, மணி ஒன்பதாகி, காலைப் போசன மணி யடித்து விடும். பாலகஞ்சி ரொட்டி, 'பன்', பழம், காபி, முட்டை, மீன், இரண்டு மூன்று மாமிஸ பக்ஷணங்கள், இவ்வளவு முண்டு காலைப் போசனத்துக்கு அநேகர் ஒரு பதார்த்தத்தை யாவது தள்ளுவது மில்லை, பாக்கி வைப்பது மில்லை. பிறகு புத்தகசாலைக குப்போய், மந்திரிமார் ஆலோசனை, குதிரைப் பந்தயக் கெலிப்பு முதலிய முக்கிய லோக சமாசாரங்களை அன்றன்றைக்கு 'வைர்லெஸ்' மூலமாக அறிந்து வெளிப்படுத்தி யிருக்கும் விளம் பரத்தைப் படித்துவிட்டு, புதுக் கதைப் புஸ்தகங்களை எடுத்து வந்து சிறிது நேரம் படித்தால், அதற்குள் 'ஸூப்' பும், பிஸ்கோத்துமாகப, பதினொருமணிச் சின்னச் சாப்பாடு தயாரா யிருக்கும். ஒரு மணி முதல் இரண்டு மணி வரையில் பெரிய சாப்பாடு; அப்புறம் 'டீ'யும் பக்ஷணங்களும்; கடைசியாக இராப் போசனம். 'தாராளமாய் விருந்தூண் இதுவது போலப் பாவித்து, ஒவ்வொரு வேளையும் பலவகைப பண்டங்களையும் பெருந் தீனி யாகப படைத்து, பிரயாணிகள் அன்னத்துவேஷம் கொண்டு சாப் பாட்டையே வெறுத்து விடும்படி செய்து, தாம் லாபம் அடைவதற் காகக் கப்பல் அதிகாரிகள் செய்த ஏற்பாடு இது' என்று கூட, நான் முதலில் நினைத்தேன். அப்படியானால், அந்த யுக்தி பூல ஜனங்கள் விஷயத்திலும் பலிக்க வில்லை யென்று பினபு தெரிந்தது. மட்டாய், ஆரோக்கியமாய், பசிக்குப் பரிகாரமாய் உணவிடுதலை நான் பார்த்ததுண்டோ என்று கூடச் சில வேளை தோன்றுகிறது.

கப்பல் வாழ்க்கையின புதுமை பொட்டென மாறி விடத் தக்கது. ஒருவரை யொருவர் இனநதெரியாத பிரயாணிகளின் சக வாசமுப, கப்பல காலக்ஷேபங்களும, நிலையும், நடையும, ஊணும், உறக்கமும், கப்பலாட்டத்துக் கொத்த ஆடும் ஆட்டமும், கப்பல் வாழ்க்கையில் உறதனயாயுள்ள தெதுவும், இரண்டொரு நாள்களுக் குள் சகஜமாய் வாடிக்கையாய்த் தோன்றி விடுகிறது. இதன் காரணம், பிரயாணிகளின் மனநிலை மாறி விடுவதே யென்று நினைக் கிறேன். அலை வேதனைக் குட்பட்டுத் தலை கிறுங்குவதாலோ, அல்லது சாசுவதமான கடலின் கரையற்ற பெருமையின் காட்சிப் பலனாகவோ, பிரயாணிகளின் மனத்தில் கால வரையறைகள் அழிந்து, முன் பின் நோக்கி யெழும் சிந்தனைகள் செயலற்றுப் போவது, கடல யாத்திரையின் விசித்ததயெனச் சொல்லலாம். நான் முதலில் சீமைக்குப் புறப்பட்டு வந்த பிரயாணத்தின் பெரும்

பகுதியும், இந்த மயக்கம் என் மனத்தை மறைத்து, அக்கரை சேரும் வரையில் நான் ஊரைவிட்டுப் பிரிந்தேனென்ற உண்மை எனக்குப் புலப்படாதிருக்கச் செய்தது. இப்பொழுதும், பத்து நாளைக்கு முன் லண்டனில் நடந்த செய்திகள், எக்காலத்திலோ நிகழ்ந்தனவை போலத் தோன்றுகின்றன. இன்னும் நான்கு நாளில் போர்ட் ஸெட் துறைமுகம் போய்ச்சேருவோம். அந்தத் துறைமுகக் காட்சியும், பச்சைத் திரைச் சீலைகளில் அப்புலி பொறித்த கொடிகள் நாட்டிய அழகிய தோணிகளில் ஏறி வந்து, கப்பலை வளைந்து நின்று, அரபியர்களும் எகிப்தியர்களும், கம்பளங்களையும் மணிகளையும் கொண்டுவந்து விலை கூறிச் சத்தமிடும் கூப்பாடும், எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அப்புறம் ஸூயெஸ் தாண்டிச் செங்கடலின் உஷ்ணத்தைச் சகித்துக்கொண்டு, ஏடென் போய்ச் சேரவேண்டும்; அப்பால் நீரும் நிழலும் நம் நாட்டது! இப்படி நாளெண்ணுவது வழக்கமாய் விட்டதே யொழிய, உண்மையில் என் மனம் ஆத்திரப்படவில்லை. சிந்தனை யற்றுக் கடற் காட்சியைப் பார்த்துக்கொண் டிருக்கும் பொழுதும், இரவில் தலைக்குமேல் அலை மோதும் பொழுதும், சில வேளை, ஒரு நிமிஷமே நெடுங்காலம் போல் நீடித்துத் தோன்றுகிறது. அத்தோற்றம் மனதுக்குத் திருப்தியையும் சந்தோஷத்தையும் தருகிறது.

கடல் யாத்திரையில் எனக்குள்ள முக்கிய அநுபவங்கள், அலை வேதனையும், இந்த ஆநந்த மயக்கமுமே. இவ்விரண்டும் ஒரு கணத்தை ஓர் யுகமாகக் காட்ட வல்லன; இவற்றின் தன்மை, பட்டறிய வேண்டுமே யன்றிச் சொன்னால் தெரியாது.

## பத்திராதிபர் தபாற் பெட்டி

ஒரு திருத்தம்—ஆடிக் காபியில் வெளிவந்த "புராதன காலத்து வித்தியார்த்திகள்" என்ற கட்டுரை, காலஞ்சென்ற ஸ்ரீ. வ. வெ. சு. ஐயர் எழுதியதன்று; திருவண்ணாமலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ. வி. சு(ப்பிரமணிய) ஐயர் எழுதியது என்று தெரிய வருகிறது.

குறள் நானூறு!

ராப்பர் - 0—4—0; டக்ஸீன் - 0—6—0;

பஞ்சாமிர்தம் ஆபீஸ் - மயிலாப்பூர்,
சென்னை.

# கம்பராமாயண இன்கவித் திரட்டு

ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C; வெள்ளக்கால்.

(299-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

## காட்சிப் படலம்

### அநுமான் சீதையைக் காணுதலைக் கூறுவது.

*அநுமான் கண்ட அசோக வனத்தில் சீதை யிருந்த நிலைமை.*

(29) வன்ம ருங்குல்வாள் அரக்கியர் நெருக்கஅங் கிருந்தாள்,
கன்ம ருங்கெழுந் தென்றுமோர் துளிவரக் காணா
நன்ம ருந்துபோல், நலன்அற உணங்கிய நங்கை,
மென்ம ருங்குலபோல் வேறுள அங்கமும் மெலிந்தாள்.

(இ-ள்.) வாள் (முதலிய ஆயுதங்கள்) ஏந்திய அரக்கியர்கள், (இராவணனுக்கு இணங்கும்படி சீதையைப் பயமுறுத்திப்) பல வருத்தம் பண்ணும்பொருட்டு, அந்த அசோக வனத்தில் (அவளைச் சூழ்ந்து) இருந்தார்கள். (மண்போலத் தன்பால் விழுந்த நீரை நெடும்பொழுது தங்கச்செய்யும் தன்மையும் வேர் ஊன்றுதற்கு இடங்கொடுக்கும் இளக்கமும் இல்லாத) கடினமான கல்லின்மேல் (விதை விழுந்து அரிதாகப் பெய்த மழைநீரால்) முளைத்து (முளைத்த காலந் தொட்டு) எப்பொழுதேனும் (மழையாயினும் மனிதராயினும் பெய்த) நீர் சிறிதும் அடையப் பெறாத (சஞ்சீவி) மருந்து (மூலிகை) போல, அழகு சிதைய வாடிய சீதை, (தனது இயற்கையாகச் சிறுத்த) இடைபோல், ஏனைய (கை கால் முதலிய) அவயவங்களும் (இராமனது பிரிவாற்றாமையால உடம்பைப் பேணாமையால் செயற்கையாக) இளைத்திருந்தாள்.

வாள் – மற்ற ஆயுதங்களுக்கு உபலக்கணம். நலம், நலன் என்பதன் விகாரம். நலம்—அழகு. உணங்கிய—வாடிய "…மருங்குலில்…இருந்த மெலிவு … மற்றை அவயவங்களிலும் பரவலாயிற்றென ஒரு சமத்காரம் தோன்றக் கூறியவாறு" காண்க.

உவமேயத்தில் 'அரக்கியர் நெருக்கிய' சீதை என்றதற்குப் பொருத்தமாக உவமானத்தில 'வெயில வெதுப்பிய' மருந்து என வருவித்துக் கொள்க. இந்த உவமான உவமேயங்களின் ஒற்றுமைத் தன்மைகள் ஊன்றி நோக்குந்தோறும் அதிகம் அதிகமாக அறியப்பட்டு ஆனந்தம் அளிப்பனவாக அமைந்திருக்கின்றன.

(30) துயிலெனக்கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்தாள்,
வெயிலிடைத்தந்த விளக்கெனஒளிஇலா மெய்யாள்;
மயிலியற்குயில் மழலையாள், மானிளம் பேடை
அயிலெயிற்றுவெம் புலிக்குழாத் தகப்பட்ட தன்னாள்.

(இ-ள்.) சீதை, (விழித்திருப்பார்க்கியல்பான கண்மூடுதல் திறத்தலன்றித்) தூங்குதற்கென்று கண்களை மூடுதலும் (தூங்கி விழித்தற்கென்று கண்களைத்) திறத்தலும் (செய்யாமல்) விட்டாள். வெயிலில் ஏற்றிவைத்த விளக்குப் போலப் பிரகாசமில்லாத மேனியுடையாளாயிருந்தாள். (கோர தந்தங்களோடுகூடிய கொடிய இராக்கத மாதர் பலர் மத்தியிலே, வேறு மனித வனிதையர் ஒருவருமின்றித் தனியளாயிருந்த அவள்,) ஓர் இளம் பெண்மான் (அதனைத் தின்னுதற்கென்று வாய் திறந்து காட்டுகின்ற) கூரிய பற்களையுடைய கொடிய புலிக் கூட்டத்தில் அகப்பட்டதை ஒத்திருந்தாள்.

இமைத்தல் - கண்ணிமைகளை மூடித்திறத்தல்; பின் முழ்கித்தலென்றதனால், திறத்தலை மட்டும் குறித்தது. முகிழ்த்தல் - குவிதல்; இங்கே மூடுதலைக் குறித்தது. பொருள் செய்தற்குப் பொருத்தமாக முகிழ்த்தலும் இமைத்தலுமென மாற்றுக. மயில் இயல் - மயிலின் சாயல் போலும் சாயல். குயில் மழலை - குயிலின் குரல் போலும் குதலைச் சொல்.

'துயிலென' என்பதற்கு, கண்டோர் இது தூக்கமென்று சொல்லும்படி யென்று பொருள் கூறுதலும் பொருந்தும்.

பருவம் நிரம்பிய பல ஆண் மான்கள் ஒரு புலியிடத்து அகப்படினும் வருந்தும். அவ்வாறாக, ஒரு தனி இளம் பெண்மான் பல புலிகளின் வாய்ப் பட்டால் படும் பாடு பாவிக்கக் கூடியதன்றிப் பகரக்கூடியதன்று. அப்படிப்பட்ட வருத்தத்தைச் சீதை அடைந்திருந்தாளென்று மிக்க இரக்கமுண்டாகக் கூறினார். அகப்பட்டது என்ற ஒருமை வினையால் மான் தனியானதென்பது பெற வைத்தார்.

(31) விழுதல், விம்முதல், மெய்உற வெதும்புதல், வெருவல்,
எழுதல், ஏங்குதல், இரங்குதல், இராமனை எண்ணித்
தொழுதல், சோருதல், துளங்குதல், துயர்உழந் துயிர்த்தல்
அழுத லன்றிமற் றயலொன்றும் செய்குவ தறியாள்.

(இ-ள்.) (சீதை) இராமனை நினைந்து (அவன் இருந்த திசை நோக்கிக்) கும்பிடுதலும் (கும்பிட்டபடியே) கீழே விழுதலும் பொருமுதலும் மேனி மிக வெதும்புதலும் பயமடைதலும் (விழுந்து கிடந்த நிலைமையினின்று) எழுந்திருத்தலும் (வாய்விட்டு) அரற்றுதலும் (கவலையுற்று) வருந்துதலும் தளர்தலும் நடுங்குதலும் துன்பத்தில் அழுந்திப் பெருமூச் செறிதலும் (இச் செயல்களெல்லாம் நிகழும்பொழுது இடை விடாமற்) கண்ணீர் விடுதலும் அல்லாமல் (துன்பத்தைத் தணிக்கத் தக்க செயல்) வேறு யாதொன்றும் தெரியா திருந்தாள்.

உற - மிக. ஏங்குதல் - (வாய் விட்டு) அரற்றுதல். இரங்கல் - (கவலையால்) வருந்தல். சிந்தாமணி 302-ம் பாட்டுரையில் 'இரங்கியெனக் கவலை கூறி, ஏங்கியென அரற்றுக்கூறி' என வருதல் காண்க.' தொழுதலையுள்ளும்

படை ஒடுங்கும்" என்ற குறளிற்போல, இங்கே 'தொழுதல் கை தொழலைக் குறித்தது; எங்குதல் முன்கூறப்பட்டதனால், அழுதல் கண்ணீர் விடுதலை உணர்த்தியது.

சாதாரண துக்கமுற்றோர் கண்ணீர் விட்டழுவர். அசாதாரண துக்க முற்றோர்பால் கண்ணீர் உண்டாகுதல் வாய்விட்டரற்றல் முதலிய செயல்கள், அவாறு மிக்க துக்கம் காரணமாக, நிகழா. கண்ணீர் ஒழுகல அழுகை முதலிய துக்கத்தைக் குறைப்பன. இவ்வுண்மையைப் போரில சிறந்த ஒரு வீரன் மனைவியின் துக்கத்தைப் பற்றி ஆங்கிலத்தில் தென்னிசன் என்ற கவி செப்பியிருப்பதனால் தெரியலாம். அது வருமாறு:—

தன் கணவன் போரில் மடிந்தானென்று கேட்ட ஒருத்தி, கண்ணீர் அரும்பாது அழாது சித்திரம்போற் செயலற்றிருந்தாள். அதுகண்ட அயல நின்ற மாதர், இவள் இந் நிலையில் இன்னும் சிறிது போதிருந்தால் இறந்து விடுவாளென்று அவளை அழும்படி பலவாறு முயன்றும் பயன்படவில்லை. அப்போது, தொட்டிலிற் கிடந்த அவள் குழந்தையை ஒருத்தி எடுத்து வந்து அவள் மடியில் வைத்தாள். வைக்கவே, மாலை மாலையாகக் கண்ணீர் வடிக்க ஆற்றத். உடனே, குழந்தையைக் கொண்டு வந்தவள் "இனிச் சாகாள். வெறுத்து விட்டுவிடத் துணிந்த உயிரைக் குழந்தைக்காக நிறுத்தி வைத்தாள்" என்றாள்.

இவ்வாறாகக் கூறிய தென்னிசக் கவிஞரது துக்கவருணனையும், இராமன், தன்னைக் காட்டுக்கு வந்து கண்ட பரதனை நோக்கி "தசரதர் தைரியமா யிருக்கிறாரோ?" என், அவன் "உமது பிரிவே பிணியாக, என் தாய் வரமே எமனாக, இறந்தார்" என்றவுடனே, இராமன் கீழே விழுந்து மூச்சவிந்து மூர்ச்சித்தான்" என்று கம்பர் கிளைகண்டு நீங்கு படலத்திற் கூறியுள்ள துக்க வருணனையும் ஒப்பு நோக்கத் தக்கன.

(தொடரும்)

---

குசிகர் குட்டிக் கதைகள்
மூன்று பாகங்களில் 22 கதைகள்
மொத்தம் விலை, ராப்பர் 1—8—0.
ஷை டக்லீன் 1—12—0.
பஞ்சாமிர்தம் பத்திரிகை ஆபீசு,
மயிலாப்பூர் - சென்னை.

# பலதுறைப் பொறுக்குமணிகள்

## பத்திரிகை ஆராய்ச்சி

(309-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

### II. கல்வி விஷயக் குறிப்புகள்.

6. புதுக்கோட்டை—சம்ஸ்தானத்தில், ஆரம்பக் கல்விப்பயிற்சியை எல்லோருக்கும் கட்டாயமாக்க, ஒரு மசோதா கொண்டுவரப்படும்.

7. ஆந்திர யூனிவர்ஸிட்டி—இதைப்பற்றிய மசோதா சட்டசபையில் கொண்டுவந்து கவனிக்கப்பட்டு வருகிறது. சென்னை யூனிவர்ஸிட்டி சட்டத்திலுள்ள தவறுகள் சில, அநுபவ ஞானத்தைக்கொண்டு, நீக்கப்பட்டிருப்பதும்; தாய்மொழிக்கு (தெலுங்குக்கு) அதிகச் சிறப்புக்கொடுத்திருப்பதுமே, இதன் முக்கிய அம்சங்களாம். இதற்குப் போதிய பணம் எங்கிருந்து வருமோ தெரியவில்லை இதனிடையே, தமிழ் யூனிவர்ஸிட்டி ஒன்றை, மதுரையிலேனும் திரிச்சிராப்பள்ளியிலேனும் ஸ்தாபிக்கவேண்டுமென்ற அபிப்பிராயம் பிறந்து, "கீரைக்கடைக்கு எதிர்க்கடை" ஒன்றும் ஏற்பட்டிருக்கிறது. மலையாளத்துக்குக் கேரள யூனிவர்ஸிட்டியும், கன்னடத்துக்கு மைசூர் யூனிவர்ஸிட்டியும் (இது நடைபெறுகிறது), வடுகுக்கு ஆந்திர யூனிவர்ஸிட்டியும் தனித்தனியே ஏற்பட்டுவிட்டால், சென்னை யூனிவர்ஸிட்டியை, வேறு பணச்செலவின்றி, தமிழ் யூனிவர்ஸிட்டியாக்கிவிடலாம் என்பதை நன்கு கவனியாமல் செய்யும் வீண் முயற்சியெனறே இதைச் சிலர் கருதுகின்றனர். இதுவுமன்றி, இந்த இயக்கத்தின் ஜனன ஜாதகத்தைக் கவனித்தால், இந்தத்தமிழ் யூனிவர்ஸிட்டியில் பிராமணரைச் சேர்த்துக்கொள்ளாமல், முற்றிலும், அல்லது மிகப்பெரும்பாலும், பிராமணரல்லாதார் யூனிவர்ஸிட்டியாகவே இது நடைபெறவேண்டுமெனவும் உட்கருத்து வெளிப்படுகின்றது. இதுவும் தவறேயாம். இந்த விஷயம் தமிழபிமானிகள் எல்லோரும் ஊன்றி யோசித்தற் குரியது.

8. அலகாபாத் யூனிவர்ஸிட்டி—திருவாக சபையார், தங்கள் ஆதிக்கத்துக்குட்பட்ட ஆண்கள் படிக்கும் காலேஜுகளில் பெண்களும் சேர்ந்து படிக்கக்கூடாதென்று தீர்மானித்திருப்பது, விந்தையிலும் விந்தையாம் பெண்கல்வியும் முன்னேற்றமும் தழைத்

துவரும் இந்நாளிலே, கல்வியறிவில் சிறந்த சபையார் இவ்வாறு கூறுவதைக்கண்டு, சிரிப்பதோ, அழுவதோ தெரியவில்லை. இச் சபையாரின் கலக்கமுற்ற புத்தி தெளிவுற்று, இந்தத் தீர்மானம் விரைவில் மாறுமெனநம்புகிறோம்.

9. பம்பாய் முனிஸிபாலிடி—இதற்குட்பட்ட பள்ளிக்கூடங்களில் 1—4—1926 முதல், சிறுவர்களுக் கெல்லாம் ஆரம்பக்கல்வி இலவசமாய்ப் போதிக்கப்படும்.

## V. சில்லறைக் கலம்பகம்

32. அமெரிக்க-ஐக்கிய மாகாணங்களின் வியாபாரப் பெருமை- உலகத்திற் பெரிய குடியரசாகும் இந்த நாட்டின் விஸ்தீரணம், பூமிப் பரப்பில் ஆறில் ஒரு பங்கில்லை, ஜனத்தொகை, ஆறிலொரு பங்கேயாம். அப்படியிருந்தும், கைத்தொழில் திறமையிலும், செய் பொருள்களின் வியாபாரப் பெருமையிலும், இந் நாட்டார் உலக மொத்த வியாபாரத்திற் சரிபாதியைக் கையாளுகின்றனர். இதற்கு உதாரணங்களாக, கீழே குறிப்பிட்ட செய்பொருள்களின் உலக மொத்தம் ஆண்டு தோறும் ஒரு நூறு என்று வைத்துக் கொண்டால், இந் நாட்டார் மாத்திரம் அந்த நூற்றில் உண்டு பண்ணும் பகுதி எவ்வளவென்பதைக் கவனிக்க,—இரும்பும் எஃகும்—57 ; செம்பு—51 ; பெட்ரோலியம்–62 ; நிலக்கரி—43 ; மரம்–52 ; கப்பற் பண்டங்கள்–65; பாஸ்பேட்–42 ; கந்தகம்–80 ; மைக்கா–63; ஈயம்–62; துத்தநாகம்–64; தாலக-சோப்புக்கல்–60; பருத்தி-55 ; மோட்டார் வண்டிகள்–85. இவ்வளவு பெருமையாகப் பண்டங்களைச் செய்து குவிப்பதுமன்றி, பிறநாடுகளோடு பண்ட மாற்றிக் கப்பல் வாணிகஞ் செய்வதிலும் இவர்கள் சிறந்து விளங்கு

---


## "தாருல் இஸ்லாம்"

### சித்திரப்படத்துடன் கூடிய சிறந்த செந்தமிழ்ச் சஞ்சிகை.

இதன் மேன்மையையும் அழகையும் அறியாதவர் இத்தமிழுலகிலும் உண்டோ? இது வரையில் 5000-த்துக்கு மேற்பட்ட அறிஞர்கள் இதனால் பெரும்பயன் அடைந்து வருகின்றனர். இஸ்லாத்துக்கும் இதர மதங்களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும், மேன்மை தாழ்மைகளையும் நன்குணர்வதற்கு இஃதொன்றே சிறந்த பத்திரிகையாயிருக்கிறது. மத சீர்திருத்தத்துக்கும், ஆசார சீர்திருத்தத்துக்கும் கல்வியின் முன்னேற்றத்துக்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் இப்பத்திரிகையே கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இதன் அருமையையும் பெருமையும் ஆழ்ந்து நோக்குங்கால் இதன் சந்தா மிகக் குறைவானதாகவே காணப்படும்.

வருஷசந்தா ரூ. 3. தான். வெளிநாடுகளுக்கு ரூ. 4.

ஹிந்து சகோதரர்களுக்கும் பொதுஸ்தாபனங்களுக்கும் எல்லா மாணவர்களுக்கும்.

வருஷசந்தா ரூ. 2. வெளிநாடுகளுக்கு ரூ. 3.

ஒவ்வோர் ஆண் பெண் கையிலும் இப்புஸ்தகம் ஹஸ்த பூஷணமாய் விளங்கத் தக்கது. உடனே எழுதுங்கள்.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்
தபாற்பெட்டி நெ. 15, சென்னை.

கின்றனர். இந் நாட்டு மூலதனம் கோடிக்கணக்காய வர்த்தகத் துறைகளில் ஈடுபடாத ஒரு நாடுமே இல்லை யென்கலாம்.

33. பஞ்சாப் விதவா விவாக சகாய சபை—இச்சபையின் உதவியால், 1925ஷ முதல் ஏழுமாதங்களில், மொத்தம் 1250 விவாகங்கள் நடந்தன. இவற்றில் பிராமணர்களுக்குள் 233: சென்னைமாகாணத்தில்-8.

34. வங்காளச் சட்டசபை — இந்தச்சபையாரும், சென்னை பம்பாய் சட்டசபையாரைப் போல, ஸ்திரிகளுக்குச் சுதந்திரம் கொடுத்துவிட்டனர்.

35. எலிகளினல் சேதம்—இந்தியாவிலே 80 கோடி எலிகளுக்குக் குறைவில்லை என்றும், ஒவ்வோர் எலியும், ஆண்டுதோறும், 6 பவுண்டு எடையுள்ள தானியத்தையாவது தின்பதால், சென்ற இருபது வருஷங்களில், எலிகளால் ஏற்பட்ட சேத மொத்தம் 125 கோடிப் பவுனுகும், அதாவது, யுத்தத்துக்குமுன் இந்தியா வுகிருந்த கடன் தொகையைவிட ஐந்து மடங்கு பெரிதாகு மென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இது தவிர, எலிகள் மூலம் பரவும் பிளேக் நோயால், வருஷந்தோறும் ஐந்து லக்ஷம் ஜனங்கள் மடிகின்றனர். இவை யெல்லாம், நாலுகால் எலிகளால் நேரும் நஷ்டம். இரண்டு கால் எலிகளும் பழைய பெருச்சாளிகளும் நாட்டுக்கு விளைக்கும் கேடும் மதிப்பிடப்படவில்லை.


# ச ரோ ஜா ஜ னி

தமிழ் உலகமே பிரமிக்கத் தக்க ஓர் அற்புதம் வாய்ந்த காதல் ரசம் ததும்பிய துப்பறியும் நாவல்.

அழகே ஓர் உருவெடுத்தாற்போல் அமைந்த 10-சித்திரப் படங்கள் அடங்கியது.

## விலை ரூபா இரண்டு

குறிப்பு:—மேற்கண்ட மனோரம்மியமான உன்னத நாவல் ஆகஸ்டு மாதம் கடைசியில் வெளிவரும். அதற்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு ஓர் கடிதம் எழுதி தங்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்து கொள்ளுகிறவர்களுக்கு தபாற் செலவு இனும்.

எம். எஸ். ராமுலு அண்டு கம்பெனி.
புஸ்தக வியாபாரிகள், 64, மன்னார்சாமி கோயில் தெருவு,
இராயபுரம், மதராஸ்.

# கலியுகமாலை

பத்திராதிபர் குறிப்பு—தஞ்சாவூர் சரபோஜி மஹாராஜா ஸரஸ்வதி மஹால லைப்ரெரி காட்டலாகில், இந்நூலைப்பற்றிப் பின்வருமாறு குறிக்கப்பட்டிருக்கிறது:—

" 148. No 334 (a) கலியுகமாலை.

ஏடுகள் 14; Lines 4 in a Page.

இது கலிகாலத்தில் நடக்கும் அநீதிகள் பலவற்றைத் தொகுத்து விளக்குவது. முதல் இரண்டு ஏடுகளில்லை. மற்றைப் பாகத்தும் சிற்சில இடத்தில் சிதைந்திருக்கிறது. இதில் 26 பாடல்களிருக்கின்றன. ஆசிரியர் பெயர் முதலியவை தெரியவில்லை. சாதாரண நடை. அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

Beginning:

......யைக் கெடுக்குங்காலம் அகுதியுவுடை
மை பறித்தக்குங் காலம்
கண்டறிய உடமையிட்டு மினுக்குங்......
கலிகாலங் காணுமிந்தக் காலந்தானே--(6)

* * * * "

பஞ்சாமிர்தம் பத்திரிகையில் வெளியிடுதற் கென்றே, இந்நூலுக்கு ஒரு பிரதி எடுத்து அனுப்பச் செய்தேன். ஏட்டுப் பிரதி எப்படிப்பட்ட தென்பதை, கீழேவரும் 7-வது கவி (ஏட்டில் உள்ளபடி எழுதப்பட்டிருப்பது) ஒருவாறு விளக்கும்:—

"குண்டணி யவயிசசை சொல்லி நடக்குங்காலம்
ககளுக காலம்
குருபாதம் பணிந்து
பெண்டுகள் பேச்சைமிகவும் கேடகுங காலம
பிராமணரை உதாசனித்துப பேசுங்காலம
யொரெனறு உரைககுங்காலம
கொண
சூது பண்ணித திரிவாரைத்தடருஙகாலம
கண்டு பிடிததாலயில்லை என்று சொல்லுஙகாலம
கலிகாலம காணுமிநதக காலநதானே எ"

கவிநடையின் வெண்மையும் கொச்சைத்தனமும், ஏட்டிலுள்ள எழுத்துப் பிழைகளும், கருத்துக்களின் நவீனமும், இதனால் விளக்கும். இதற்குப் பின்வரும் செய்யுள்களையும் ஏட்டில் உள்ளபடியே பதிப்பிடாமல், கூடிய வரை திருத்திப் பதிப்பித்திருக்கிறேன். சந்தேகமான இடங்களை மட்டும் அப்படியே பதிப்பித்திருக்கிறேன். —ப-ர் ப-மீ

"பெற்றவரைப் புறக்கணித்துத் திரியுங்காலம்,
பெரியோர்கள் உடைமைவிற்றுப் பிழைக்குங் காலம்,
அற்றவர்கள் ஏவல் செய்தும் ஈயாக்காலம்,*
அறியாரைப்பேதம்பண்ணி அழிக்குங்காலம்*
வைத்த பொருள் தனை யெடுத்துக் கொடாதகாலம்,
வடிவுடைய மங்கையரை வதைக்குங் காலம்,
கற்றவித்தைதபேசி இடக்கடிக்குங் காலம்,
கலிகாலங்காணுமிந்தக் காலந்தானே. (அ)
தந்தைதாய் குருவையுதாசனிக்குங் காலம்,
'ஞசரித்த மனுசரை யெசலிக்குங்காலம்''
நிந்தனைகள பெரியோரைச் சொல்லுங்காலம்,
நிஷ்டூரருடன் உறவாய் நிற்குங்காலம்,
அந்தமனையாளிருக்க வேறேயப்பால்
அ(ண?, டையெனும் பலஸ்திரீயை அணையுங் காலம்,
சுந்தமிலா அரி அயனைப் பணியாதகாலம்,
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே. (க)
சாதிகுலந்தாழ்வு சொல்லிப் பழிக்குங் காலம்,
சந்தடியில் முடிச்சவிழ்த்துச் சுதிசெய்காலம்,
ஓதியுணர்ந்தும் ஒன்றும்' அறியாக் காலம்,
உற்றதுணையாயிருந்தும் உதவாக்காலம்,
நீதியிது நிலையிது என்றறியாக் காலம்,
"நேரிழையாள வசனமதே நெகிழாத காலம,"
காதிலியும் உடைமைதனை அறியாதகாலம்,
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே. (௰)
விசுவாசமாய்க்களவு கொள்ளுங்காலம்,
வேடரெனக காடுதனில் வெருட்டுங்காலம்,
சிசுவாகிக குருவுடைமை தின்னுங்காலம,
சிவசமயம் அரிசமயம் சிறுக்குங் காலம்,
பசுபாசமுள்ளவரைப் பறிக்குங்காலம்,
பணங்காசு படைத்தவரைப் பகைக்குங்காலம்,
"தசிவாகி அருகிருந்து காடு சொல்லுங்காலம்"
கலிகாலம் காணுமிந்தக் காலந்தானே. (௰க)
பண்டுபழையோரை வைத்து நடத்தாக்காலம்,
பலஸ்திரீயைப் பெண்டெனவே படைக்குங் காலம்
பெண்டுகளே பணநோட்டம் பார்க்குங் காலம்,
பிள்ளைகளே புத்திசொல்லப் பிழைக்குங் காலம்
கொண்டுவிடும் தொண்டுகளே பேசுங் காலம்
குலாமருமே உற்றாராய்க் குலவுங காலம்,
கண்டதுசொல்குண்டுணியாய்த் திரியுங காலம்,
கலிகாலங் காணுமிந்தக் காலந்தானே. (௰உ)

(தொடரும்)

* அத்தவறத தேவலசெயது ஈயாதகாலம்

# நாகரிக சமூக வாழ்க்கைக் குறிப்புக்கள்

(63-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

4. பஞ்சாப் விதவா விவாக சகாய சபை—இச் சபையின் ஆதரவில், இந்தியா முழுவதிலும், 1924-ம் வருஷத்திலே, 1603 விதவா விவாகங்கள் நிறைவேறின. முன் ஆண்டுகளில் நடந்த விதவா விவாகங்களின் கணக்குப் பின் வருவது :— 1916–13; 1917–31; 1918—40; 1919—90; 1920—220; 1921—317; 1922—453; 1923—892 எனவே, இம் முயற்சி, ஆண்டு தோறும் வளர்ந்தோங்கி வருவது விளங்கும்; ஆயினும், இந்நாட்டி லுள்ள விதவைகளின் மொத்தத் தொகையைக் கவனித்தால், 1603 விவாகங்கள் எவ்வளவு சொற்ப மென்பது புலப்படும்.

| மாகாணம். | விதவைகள் மொத்தம் | 1924-ல் நடந்த விதவா விவாகங்கள் |
|---|---|---|
| பஞ்சாப், டில்லி, வடமேற்கு எல்லைப்பிரதேசம் | 8, 77, 107 | 1137 |
| ஐக்கிய மாகாணங்கள் | 32, 71, 984 | 286 |
| பிகார் - ஒரிஸ்ஸா | 30, 43, 890 | 76 |
| வங்காளம் - அஸ்ஸாம் | 28, 16, 374 | 51 |
| ராஜபுதனம் | 7, 52, 205 | 11 |
| பம்பாய் மாகாணம் | 19, 58, 319 | 26 |
| மத்தியப் பிரதேசங்கள் | 10, 85, 990 | 10 |
| சென்னை மாகாணம் | 30, 43, 971 | 6 |
| மொத்தம் | 1,77, 49, 840 | 1603 |

இந்த 1603 விவாகங்களில், பிராமண சாதியில் நடந்தவை 338; இவற்றில் 42 பிராமண விதவைகள், வேறு சாதிப்புருஷரையும், 14 பிராமண கனவான்கள் வேறுசாதி விதவைகளையும், மணம் புரிந்து கொண்டனர். இச்சபையின் ஆதரவில் விதவா விவாகங்களை முடித்து வைப்பதற் கென்றே, வடமதுரையிலும், லாகூரிலும், ஹரித்துவாரத்திலும் ஆசிரமங்கள் இருக்கின்றன. இந்தியாவில் பலவிடங்களில் கிளைச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன. 1924-ம் வருஷத்தில் உழைத்த கிளைச் சங்கங்களும் பிரசாரகர்களும்

மொத்தம் 422; இவர்களில் 7 பேர் சம்பளம் பெற்று வேலை செய்து வருகின்றனர். சென்னை மாகாணத்தை "இருள் பிடித்த மாகாணம்" என்று பிறர் பரிகசிப்ப துண்டு. இதற்கேற்ப, இம்மாகாணத்தில் இதற்காக உழைத்தவர் இருவரே, மொத்தம் விவாகங்கள் 6 தான. 1924-ம் ஆண்டில், 1452 புருஷருப், 239 விதவைகளும் சபையின் சகாயத்தை நாடினர்.

5 சிசு மரணம்—இந்தியாவிலே, ஆண் குழந்தைகளில் ஆயிரத்துக்கு 274-ம், பெண் குழந்தைகளில் ஆயிரத்துக்கு 260-ம சாகின்றன. மற்றத் தேசங்களில சிசுமரண விகிதம் இப்படியில்லை ஆண், பெண் சராசரியில, ஆயிரம பிறவியில், ஜப்பானில்—156; இத்தலியில் 153; பிரான்ஸில—126; அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில்—124; இங்கிலாந்தில் —17 குழந்தைகளே சாகின்றன. இதுவன்றி, எந்த நாட்டிலும், கைத்தொழிற் சாலைகளும் ஏழைக் கூலியாட்களும் ஜன நெருக்கமும் மிகுந்துள்ள பட்டணங்களில, நாட்டுப புறங்களையுமட நாட்டுச் சராசரியையும்விட, சிசுமரண விகிதம் அதிகமாயிருப்பது இயல்பு. அவ்வாறுள்ள ஐரோப்பிய, அமெரிக்கா நகரங்களிலும், நமது பம்பாய் நகரத்திலும், 192'-ம் வருஷக் கணக்குப்படி சிசு மரணத்தைக் கவனித்தால், ஆயிரம குழந்தைகள் பிறந்தால் சாகும் குழந்தைகள்:—கிறிஸ்டியானியா—?4; லண்டன்—?0; ஹாமபர்க்—95; பெர்லின் —135; கோலோன— 40; வியன்னு—1?6; ந்யூயார்க் 71; பம்பாய் —665. ஸர்க்கார் மதிபபின்படியே, இந்தியாவிலே பிறக்கும் குழந்தைகள் மொத்தத்தில், ஏறத்தாழ நானகில் ஒன்று, அதாவது கால்வாசிக் குழந்தைகள், ஓராண்டுக்குள் இறந்து போகின்றன. இவ்வண்ணமாக, ஆண்டுதோறும், இருபது லக்ஷம் குழந்தைகள் இந்தியாவிலே மடிகின்றன. இந்தியாவின் மகோன்னதமான சிறப்பை நோக்குக!

6 ஜன நெருக்கக் கணக்கு—ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்கள் நெருங்கி வசிக்கும் பட்டணங்களுமுண்டு, மனுஷ்ய வாசமேயில்லாத வனாந்தரங்களுமுண்டு. தேசத்தின் மொத்த விஸ்தீரணத்தையும் ஜனத்தொகையையும் விகிதப்படுத்தி, தேச மொத்தத்துக்கு, சராசரி, ஒரு சதுரமைலுக்கு இத்தனைபேர் என்று கணக்குப் பார்ப்ப துண்டு. அந்தக் கணக்குப்படி, சில நாகரிக நாடுகளில், ஒரு சதுர்மைலுக்கு எத்தனைபேர் வசிக்கிறார்கள் என்பது பின்வருவது:—பெல்ஜியம் 654; பிரான்ஸ் 184; ஜெர்மனி 332; ஸ்பெயின் 107; ஜப்பான் 215; ந்யூஸிலந்து—11¾; அமெரிக்கா ஐக்கிய மாகாணங்கள்—32; இங்கிலாந்து-வேல்ஸ்—649; இந்தியா—177. நமது நாட்டுக்குள், மாகாணங்களைத் தனியா யெடுத்துக் கொண்டால்,—வங்காளம்—578; பம்பாய்—143; பர்மா—57;

பஞ்சாப்—183 ; ஐக்கியப் பிரதேசங்கள்—414 ; சென்னை மாகாணம்—217 ; (ஒரு சதுரமைல்—1-மைல் நீளம் × 1 மைல் அகலமுள்ள பூமி ; 7 மைல் நீளமும் 4-மைல் அகலமுமுள்ள சென்னை நகரத்தின் விஸ்தீரணமொத்தம் 28 சதுர மைல்.)

# புத்தர் அறநெறி

ஸ்ரீலஸ்ரீ. இலக்குமணப் போற்றிகள், தச்சநல்லூர்

## 2-ம் அதிகாரம்—தியானத்தைப் பற்றியது

(முதல் மாலை, 1013-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

21. தியானிப்பது அழிவின்மைக்கு வழியாகின்றது, தியானமின்மை மரணத்துக்கு வழியாகின்றது. தியானிக்கிறவர்கள் மரிக்கிறதில்லை, தியானியாதவர்கள் முன்னமே இறந்தாற் போலுள்ளார்.

22. தியானத்தில் மேற்சென்றவர்கள், இதனைத் தெளிவாய்த் தெரிந்துகொண்டு தியானத்திலே இரமிக்கின்றனா, சாறுக்கள் ஞானத்தில் நிலைக்கின்றனர்.

23. இந்த விவேகிகள் தியான சக்தராய், திடமுற்றவராய், எப்போதும் திடபலமுடையவராய், உயர்வற உயர்ந்த ஆனந்த நிலையாகிய நிருவாணத்தை அடைகின்றனர்.

24. தியானமுற்றவன் தன்னை ஜாக்கிரதைப் படுத்திக் கொள்வானேல், மறதி யற்றவனு யிருப்பானேல், அவனுடைய செய்கைகள் பரிசுத்தமா யிருக்குமேல், யோசனையுடன் நடப்பானேல், தன் மனதை அடக்கி நியாயப் பிரமாணப்படி வாழ்வானேல, அப்பொழுது அவனுடைய மகிமை அதிகரிக்கும்.

25. தன்னை ஜாக்கிரதைப்படுத்திக் கொள்வதால், தியான சிந்தனை செய்வதால தன்னை அடக்கி ஆளுவதால், விவேகமுள்ளவன், யாதொரு வெள்ளத்தாலும் மோதப்படாத ஒரு நிலையைத் தனக்குத் தானே ஆக்கிக் கொள்ளலாம். தீமையான அறிவுள்ள மூடர்கள் பயனற்றதைப் பின்பற்றுகின்றனர். விவேகிகள் ஆலோசனையைச் சிறந்த அணியாக வஹிக்கின்றனர்.

27. பயனற்றதை, அல்லது ஆசையும் இச்சையுமுள்ளவற்றை, அனுபவிப்பதைப் பின் பற்றுதே. ஆலோசித்துச் சிந்தனை செய்கிறவன் பேரதுமான சந்தோஷத்தை அடைகிறான்.

28. கற்றறிந்தவன் ஆலோசனையினால் பயனற்றதைத் துரத்திய பொழுது, விவேக ஞான முள்ள அவன் விவேகத்தினால் ஆறு

தலை அடைந்து கொண்டு உழையா நின்ற ஜனக்கூட்ட விஷயமாய் உழைப்பதைவிட்டு விலகி, ஒரு குன்றின்மீது நிற்கிறவன் தரையில் நிற்கிறவர்களைப் பார்ப்பது போல, மூடர்களை அலக்ஷ்யமாய்ப் பார்க்கின்றனன்.

29. விவேகஞான முள்ளவன், ஆலோசனை யற்றவர்களின் நடுவே ஆலோசனையுள்ளவனும், தூங்குகிறவர்களின் நடுவே விழிப்புடையவனும், வாடகைக் குதிரையைப் பின்னே விடுத்துச் செல்லுகிற பந்தயக் குதிரைபோல மேற் செல்லுகின்றனன்.

30. உண்மையுள்ள சிரத்தையினால் இந்திரன் தேவர்களின் தலைமை ஸ்தானத்துக்கு உயருகிறான். ஜனங்கள் உண்மையுள்ள சிரத்தையைப் புகழ்கின்றனர்; அஜாக்கிரதையானது எப்பொழுதும் குற்றம் சாட்டப்படுகின்றது.

31. சிந்தனையிலே இரமித்து, சிந்தனை யின்மையை அச்சத்துடன் பார்க்கிற பிக்ஷுவானவன், சிறிதோ அல்லது பெரிதோ ஆயுள்ள சகல (ஐம்புல) விலங்குகளையும் எரியா நின்ற நெருப்பைப் போல சஞ்சரிக்கின்றான்.

32. சிந்தனையிலே இரமித்து சிந்தனை யின்மையை அச்சத்துடன் பார்க்கிற பிக்ஷுவானவன் அழிவடைய மாட்டான். நிருவாண தசையை நெருங்குகிறான்.

## மூன்றாவது அதிகாரம்—நினைப்பு

33. ஒரு வில்லாளி தன் அம்பை நேராக்குகிறதுபோல, ஒரு ஞானியானவன் அடக்கவும் திருப்பவும் கஷ்டமாயுள்ள தனது சஞ்சலமும் ஸ்திரமற்றதுமான எண்ணத்தை நேராக்குகிறான்.

34. ஜலவாசத்தை விட்டு எடுத்து உலர்ந்த தரையில் எறியப்பட்ட மீனைப்போல (தீ நெறிக்குத் தூண்டும்) மாரனது இராஜ்யத்தைவிட்டுத் தப்பிக்கொள்ளும் பொருட்டு நமமுடைய எண்ணம் எங்கும் துடிக்கின்றது.

35. விரும்பு மிட மெல்லாம் பாய்ந்துகொண்டு, அடக்க முடியாமல் ஓடிக்கொண்டிருக்கிற மனசைச சாதுவாகப் பழக்குவது நல்லது; பழக்கப்பட்ட மனசானது இன்பத்தைக் கொடுக்கின்றது.

36. ஞான முள்ளவன தன் நினைப்புகளைக் காத்துக் கொள்ளட்டும; ஏனென்றால் அவைகளை அறிவது கஷ்டம், மிகவும் தந்திரமுள்ளன. விரும்புமிட மெல்லாம் பாய்ந்து செல்லுகின்றன; நன்றாய் அடக்கப்பட்ட நினைப்புகள் இன்பத்தை அளிக்கின்றன.

37. தூரமாகப் பிரயாணம் செய்து தனியே சஞ்சரித்து, சரீரம் ஒன்று இல்லாமல் இருதயமாகிய அறைக்குள் மறைந்து கொள்கிற மனசை வசப்படுத்துகிறவர்கள், மாரனது பாசக் கட்டுகளினின்றும் விடுதலை யடைவார்.

38. ஒருவனுடைய நினைப்புகள் ஸ்திர மற்றிருந்தால், உண்மையான நியாயப் பிரமாணத்தை அவன் அறியாதிருந்தால், அவனுடைய மனோசாந்தி தொந்தரவுக் குட்பட்டிருந்தால், அவனுடைய அறிவு ஒருபோதும் பூர்த்தியடையமாட்டாது.

39. ஒருவனுடைய நினைப்புகள் சிதறுண்ணு திருந்தால், அவனுடைய மனசு குழப்பமடையா திருந்தால், நன்மையையாவது தீமையையாவது பற்றி நினைப்பதை விட்டு விட்டால் தான், ஜாக்கிரதையாயுள்ள பொழுது அவனுக்குப் பயமில்லை.

40. இந்த உடல் ஜாடியைப் போல நொய்தா யிருப்பதை உணர்ந்து, இந்த நினைப்பை ஒரு கோட்டையைப்போல உறுதியாக்கிக் கொண்டு, அறிவாகிய ஆயுதங்கொண்டு மாரனை ஒருவன் தாக்கவேண்டும். அவனை ஜெயித்தபொழுது அவன்மீது ஜாக்கிரதையாயிருத்தல் வேண்டும். அந்தப் போரைவிட்டு ஒருபோதும் ஒழிவடைதல் கூடாது.

41. விரைவில், அந்தோ! இந்தச் சரீரம் இகழப்பட்டு, அறிவின்றி உபயோகமற்ற கட்டையைப் போல பூமியின்மீது கிடக்கும்.

42. பகைவன் பகைவனுக்கு அல்லது சத்துரு சத்துருவுக்கு என்ன செய்த போதிலும், தப்பு வழியிற் செலுத்தப்பட்ட மனசானது நமக்கு மிகவும் அதிகத் தீங்கைச்செய்யும்.

43 தாய், அல்லது தந்தை, அல்லது வேறு பந்து அவ்வளவு செய்யமாட்டான்; நன்மார்க்கத்திற் செலுத்தப்பட்ட மனசானது நமக்கு மிகவும் அதிகமான உபகாரத்தைச் செய்யும்.


## The "Hindu Nesan"

(THE LEADING TAMIL WEEKLY.)

Commands a decent circulation-Stands as a best medium for advertising.

News of varied interest a special feature.

" இந்து நேசன் "

வாரப்பதிப்பு - சந்தா விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-வருஷத்திற்கு | ... | ரூ. | 6 | 0 | 0 |
| 6-மாதத்திற்கு | ... | ,, | 3 | 8 | 0 |
| 3-மாதத்திற்கு | ... | ,, | 1 | 12 | 0 |

மலாய், மோரிஸ், நேட்டால், முதலிய வெளி நாடுகளுக்கு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-வருஷத்திற்கு | ... | ,, | 10 | 8 | 0 |
| தனிப்பிரதி | ... | ,, | 0 | 0 | 0 |

*For Particulars apply to:*

THE MANAGER, THE "HINDU NESAN"
65, Armenian Street, MADRAS.

# சைவ சமய வரலாறு

(214-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ரெவ். F. கிங்ஸ்பேரி, B.A., சென்னை

III. தமிழகத்துக்கு ஆரியர் வரத்தொடங்கின காலம் அறியோம். இராமாயண பாரத காலங்களில் ஆரியர் பலர் தமிழகத்துக்கு வந்து, சம்பந்தம் கலந்து விட்டனர். படிப்படியாய் கூட்டங் கூட்டமாய் ஆரியர் தமிழகத்துட் புகுந்து, தமிழ் மொழிகற்று, தமிழில் நூல்களும் இயற்றி, ஹிந்து ஆரிய சமயத்தையும் ஆரிய நாகரிகத்தையும் இங்கு பரப்பினர். [ஆரியர் தமிழகம் வருமுன்னே தமிழருக்குள்ளே மதக்கோட்பாடுகளும் தமிழ் நாகரிகமும் இல்லையென்று நான் சொல்லவில்லை.] கிறிஸ்துவுக்கு முன் ஐந்தாம் நூற்றாண்டு முதல் கிறிஸ்து பிறந்து ஐந்து நூற்றாண்டு வரையிலும், இப்போது நான் சொல்லிய ஹிந்து சமய வளர்ச்சி, ஆரிய நாகரிக வளர்ச்சி நிகழ்ந்தன. [ஆரியர் முதல் முதல் தமிழகம் வந்த காலம் கிறிஸ்துவுக்கு முன் ஐந்தாம் நூற்றாண்டு என்றுவது, கிறிஸ்துவுக்குப் பின் ஐந்தாம் நூற்றாண்டில் அது நின்று விட்டது என்றுவது, நான் சொல்ல வில்லை.]

இக்காலத்திலே ஹிந்து சமயம் மட்டுமன்று, மகா வீர கௌதம முனிவர் ஸ்தாபித்தருளிய சமண சமயமும், சித்தார்த்த கௌதம முனிவர் ஸ்தாபித்தருளிய பௌத்தமும் தமிழகத்திற் புகுந்து மிக விருத்தியடைந்து வந்தன. ஆகவே இயேசுக்கிறிஸ்து பலஸ்தீனா நாட்டிற் பிறந்த காலத்திலே, தமிழகத்திலே இந்திர வணக்கம், சிவ வணக்கம், விஷ்ணு வணக்கம், அருக வணக்கம், புத்த வணக்கம் ஆகிய ஆரிய வணக்கங்களும்; தமிழகத்திலே தொன்று தொட்டுள்ள முருக வணக்கம் முதலியனவும் ஒன்றோடொன்று செறிந்து கலந்து வளர்ந்தன என்பதற்கு, சங்கத்து நூல்களே சாட்சி. சங்கப்புலவர்கள் வெவ்வேறு வணக்கமும் வெவ்வேறு வழிபாடும் உடையரேனும், இவை காரணமாகச் சிறிதேனும் அவர்கள் நட்புக் குறைய வில்லை. இஃது இக்காலத்துத் தமிழர் மனத்தில் இருக்கக் கடவது.

கிறிஸ்தப்தம் ஏழாம் நூற்றாண்டிலோ, சமண சமயப் பெருக்கமும் பௌத்த சமயப் பெருக்கமும் தமிழகம் முழுதும் காணப்

பட, சிவ வணக்கம் விஷ்ணு வணக்கம் மிகக்குன்றி ஒழிந்தே போய்விடும் என்று அஞ்சத் தக்க நிலைக்கு வந்து விட்டன.

IV. கிறிஸ்தப்தம் ஏழாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரையில உள்ள காலத்தில, ஆழ்வார பன்னிருவரும் சைவசமயகுரவர் நால்வரும் தோன்றி, நாலாயிரத் திவ்விய பிரபந்தமும், தேவார திருவாசகங்களும் அருளிச் செய்தனர். ஒடுங்கி ஒழிந்துபோகும் நிலையில் இருந்த விஷ்ணு வணக்கமும் சிவ வணக்கமும் முன் ஒருபோதும் இலலாத உசசநிலை அடைந்தன. பௌத்தமும் சமணமும் தாம் இருந்த இடமும் தெரியாமல் மறைந்துபோயின. இதற்குக் காரணம் "அருளிச் செயலகளும்" "அருட்பாக்களும்" மட்டுமலல. தநதிர சமயங்கள் வந்ததும காரணம். தநதிரம என்றது ஆகமங்களே.

வேதம், உபநிடதம், வேதாங்கம், புராணம், இதிகாசம், ஸ்மிருதி என்பனவற்றை நன்கு கறற பலா, ஆகமம் என்ற பெயர் கூடக் கேளாதவர் போல் இருக்கின்றனர். இன்று தமிழ் நாட்டிலே சிவாலய விஷ்ணு வாலயங்களிலே நடக்கும் பூசைகளும், கிரியைகளும் ஆகமங்களால விதிக்கபபடட பூசைகளும கிரியைகளும் என்பதை இவர் அறியார். கோயில்கள் இப்படி யிப்படிக் கட்டப் படவேண்டும் என்பதும் ஆகம விதிகளே. பாஞ்சராத்திரம், வைகாநசம் என்னும் இரண்டுமே வைஷ்ணவ ஆகமங்கள். இவற்றுள் பாஞ்சராத்திரமே மிகப் பெரும்பாலும் அநுஷ்டிக்கப் படுவது. சைவாகமம், காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டாம். வடக்கே காசுமீரத்திலே முன்பின் கிறிஸ்தப்தம் ஐந்தாம் நூற்றாண்டு முதல் தோன்றியன போலும் இவ் விருபத்தெட்டுச் சிவாகமங்களும். இவைகளின் பெயர் முறையே காமிகம், யோகஜம, சிந்தியம, காரணம், அசிதம, தீப்தம், சூக்குமம, சகசிரம, அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம, விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம, வாதுளம் என்பன.

இவை எல்லாம் அழிந்தொழிந்து போகாமல் இருக்கின்றனவோ, இருபபினும், இவைகளில் எத்தனை அசசிடப்பட்டிருக்கின்றனவோ அறியேன். ஆயினும் இவறறுட் சிலவாயினும் உள என்பதறிருச் சந்தேகமில்லை. இக்காசுமீரச் சைவாகமங்கள் எப்பொழுது தமிழ்நாட்டுக்கு வந்தனவோ அறியேன். மூவர் தேவாரத்திலே, "ஆகமம்" என்ற சொல் சம்பந்தர், அப்பர் தேவாரங்களில் இல்லைப்போலும். ஆயினும் சமபந்தர் தேவாரததிலே, திருநீற்றுப் பதிகத்திலே "தந்திரமாவது நீறு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே 'தந்திரம' என்றது 'ஆகமம்' என்ற சொல்; சில

முறை வருகிறது. இச் சொல்லைத் திருவாசகத்திலே பலமுறை காணலாம்.

இது நிற்க, ஆழ்வார்கள் பன்னிருவரும் அருளிச் செய்த நாலாயிரத் திவ்விய பிரபந்தம், சமய குரவர் நால்வரும் இயற்றிய தேவார திருவாசகங்களும் சமண பௌத்த சமயங்களை இருந்த இடமுந் தெரியாமல் ஓட்டிவிட்டன என்றும், விஷ்ணு வணக்கமும் சிவ வணக்கமும் முன்னில்லாத சீருஞ் சிறப்பும் பெற்றன என்றும் சற்று முன்பு சொல்லப்பட்டது. இது மெய்யே; ஆயினும் பாகு போல் இளக்கமுள்ள இவ்விரண்டும் இறுகிக் கட்டிகளாகி வைஷ்ணவ சமயம் சைவ சமயம் ஆயின.

இக்காலத்திற்குமுன் பிரம சூத்திரத்துக்கு ஒரு சைவபாஷ்ய மும் செய்யப்பட்டது. சங்கர பாஷ்யம், இராமானுஜ பாஷ்யம், மத்துவபாஷ்யம என மூன்று பாஷ்யங்கள் பிரம சூத்திரத்துக் குள்ளன என்பது பரவறிந்த விஷயம். சங்கரபாஷ்யம் ஏகான்ம வாதத்துக் கிசைய எழுதப்பட்டது. இராமானுஜ பாஷ்யம் விசிஷ்டாத்துவிதத்துக் கிணங்க வரையப்பட்டது. மத்துவபாஷ்யம் துவிதத்துக் கிணங்கச் செய்யப்பட்டது. இவைகளுள், சங்கர பாஷ்யமே காலத்தால் முந்தியது. சங்கரபாஷ்யம் எழுதப்பட்ட காலத்திற்குமுனே, மற்றைய இரண்டும் எழுதப் படுவதற்கு முன்னமே, தோன்றியது நீலகண்ட சிவாசாரியார் எழுதிய சைவ பாஷ்யம். இதற்கு நீலகண்ட பாஷ்யம் என்றும் பெயர். மற்றைய மூன்று பாஷ்யங்களையும் படிப்பாரும், அவற்றைப் போற்றுவாரும் பலர். நீலகண்ட பாஷ்யமோ தானிருக்குமிடமும் தெரியாமல் மறைந்திருக்கிறது. ஆயினும் இதுவும அச்சில் வந்துள்ளது.

"வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைகண்ட வித்தகச் சித்தர் கணமே" என்ற தாயுமானவர் வாக்கை வாசிக்குந் தோறும் வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் சமரசப் படுத்த முடியுமா என்ற ஐயம் பலருக்கு ஜனித்திருக்கலாம். வேதாந்தம் என்பது உபநிடதம். உபநிடதத்தின் சாரமே. வேதாந்த சூத்திரம் என்றும் பிரமசூத்திரம் என்றும் பெயர் பெறும. இதை எழுதினவர் வியாசர் என்பர். முன்னே சொல்லப்பட்ட நான்கு பாஷ்யங்களும் (பாஷ்யம்-விருத்தியுரை அல்லது பேருரை) பிரமசூத்திரத்துக்கு எழுதிய உரைகளே. இவைகளில் சங்கர பாஷ்யத்தின்படிவேதாந்தம் சித்தாந்தத்துக்கு ஒத்துவராது. இவைகளைச் சமரசப் படுத்த முயல்வது வீண். ஆயினும் நீலகண்ட பாஷ்யத்தின்படி வேதாந்தம், சித்தாந்தம் இரண்டையும் சமரசப்படுத்தலாம என்பர்.

(தொடரும்.)

சிறுவர் பக்கம்



## 5. மழை.

மழை மிகவும் சந்தோஷகரமானது. மயிலுக்கும் எருமை மாட்டுக்கும் குழந்தைகளுக்கும் மழை பெய்தால் உற்சாகம். மயில் தோகை விரித்து ஆடும்; எருமை மாடு, தன் முதுகில் மழை பெய்வதனால், மகிழ்ந்து நிற்கும்; குழந்தைகள் அஷ்டத்தனமாய்த் தண்ணீரில் நனைந்து விளையாடுவார்கள்.

வண்ணானுக்கு மழை பிடிக்காது; வேறு சிலர்க்கும் அப்படியே. இதைப்பற்றி ஒரு கதை உண்டு. ஒருநாள் தேவலோகத்தில் மழைராசா தமது சேவகனைக் கூப்பிட்டு, "நீ கீழ் உலகத்துக்குப் போய், நமது ஜனங்களுக்கு மழை விஷயத்தில் என்ன வரம் வேண்டுமென்று விசாரித்துக்கொண்டு வா, அவர்கள் கேட்ட வரத்தைக் கொடுப்போம்" என்றார். வெகுநாள் கழித்துத் தூதன் திரும்பி வந்தான். "சுவாமி! அவர்களைக் கேட்டுப் பிரயோசனமில்லை; குடியானவன், மழை கொட்டவேண்டும் என்கிறான்; கொத்தன், மழை வேண்டாம் என்கிறான். விளையாட்டுக் குழந்தையொன்று, ஆனைகட்டி மழை கேட்கிறது. வடகம் உலர்த்தும் பாட்டி, பளிச்சென்ற வெயில் வேண்டும் என்கிறாள். இப்படி ஆளுக்கொன்றாக அவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டு, எனக்குக் காது துளைத்துப் போய்விட்டது. எப்பொழுதும் போலத் தங்கள் சித்தப்படி மழை பெய்யச் செய்வதுதான் நல்லது" என்று, தூதன் விண்ணப்பம் செய்தான். 'சரி' என்று தலையை அசைத்தார் மழை ராசா; எப்பொழுதும் போல் மழை பெய்தது. ஆகையால், "மழையே, மழையே, வா" என்று கூப்பிட்டால் மழை வராது. அதுவாகப் பெய்யும் பொழுதை வீண் போக்காமல், குழந்தைகளே, மழையில் ஓடி விளையாட வேண்டும்.

—ராமாயி.

# மசூதிகள், அரண்மனைகள், சமாதிகள்


ஸ்ரீ Dr. K.N. சீதாராம், M.A., Ph. D, Litt. D; & c, கோலாப்பூர்.

நமது தாய் நாட்டில் இருக்கும் பழைய கட்டிடங்களை, இந்துக்கள் கட்டுவித்த கட்டிடங்கள் என்றும், முகம்மதியர்கள் கட்டுவித்தவைகள் என்றும் பிரிக்கலாம். இந்து கட்டடங்களை, பிராமண மதத்தைச் சேர்ந்த கட்டிடங்கள் என்றும், புத்த ஜெயின மதங்களைச் சேர்ந்தவைகள் என்றும், மறுபடியும் வகுத்துக் கூறலாம். இவைகளுக்குள், இந்த வியாஸத்தில் முகம்மதிய கட்டிடங்களைப் பற்றிச் சற்று ஆராய்வோம். ஐரோப்பியரில் பெரும்பாலார், முகம்மதிய கட்டிடங்கள் முகம்மதியருடன் நமது நாட்டிற்கு வந்தன என்று அபிப்பிராயப்படுகிறார்கள். அது மிகவும் தப்பிதமான அபிப்பிராயம். இந்திய முகம்மதியர்கள் நமது தாய் நாட்டில் இப்பொழுது சுமார் ஏழுகோடிப் பெயர் இருக்கிறார்கள். இவர்களில், சுமார் 50,000 பெயரைத் தவிர, மற்றவர்கள் எல்லோரும் இந்து மாதாவின் பிள்ளைகள் என்றே சொல்லலாம். அது போலவே, இவ்விடத்தில் இருக்கும் கட்டிடங்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது, இந்து மதஸ்தர்கள் கையாலும், இஸ்லாமைத் தழுவின இந்துத் தொழிலாளிகளாலுமே கட்டப்பட்டுள. இப்பேர்ப்பட்ட கட்டிடங்களை, பட்டாணியர் கட்டிடங்கள் என்றும், மொகலாயர் கட்டிடங்கள் என்றும், இரண்டு வகுப்பாகப் பிரிக்கலாம். இவற்றில் பட்டாணிக் கட்டிடங்கள் சுமார் பன்னிரண்டாவது நூற்றாண்டிலிருந்து பதினைந்தாவது நூற்றாண்டுவரை கட்டப்பட்டன. அதாவது, குட்புடீன் என்னும் 'சிலேவ்' வம்சத்தைச் சேர்ந்த முதல் டில்லி ராஜாவின் காலம் துவக்கி, 'ஷர்ஷா' என்னும் 'ஆப்கன' ராஜா காலம் வரை உள்ளன. மொகலாயக் கட்டிடங்கள், ஹுமாயூன் என்னும் இரண்டாவது மொகலாய ராஜா காலம் துவக்கி, 'அவுரங்கஜீப்' என்னும் மொகலாய ராஜாவின் காலத்தில் க்ஷீணம் அடைந்தன. இதன் பொலிவு காலம் சுமார் இரண்டரை நூற்றாண்டுகள். இந்த இரண்டுவிதக் கட்டிடங்களிலும், பட்டாணியர் (Pathan) கட்டிடங்கள், கம்பீரத்தாலும், உறுதியாலும், விசேஷ

283



மான சித்திரத் திறமை இல்லாமையாலும், அகிருத்திரமத்தாலும் கீர்த்தி பெற்றன. இக் குணங்கள் பொருந்தி, இவ் வகுப்புக்கு உதாரணமாய் விளங்குவன, டில்லிக் கோட்டையில் இருக்கும்



டில்லி நகரம்.

குட்புடீன் மசூதியும், 'அல்டாமிஷின்' கட்டிடங்களும், அல்லாவுடீனின் கட்டிடங்களும், டாக்ளாக் அரச வம்சத்தினரது கட்டிடங்களும், ஷர்ஷா புதை பட்டிருக்கும் 'ஸகஸாம் என்னும் தீவில் அவரது சமாதியுமே. இவற்றுள், அநேக ரூபபேதங்கள் இருக்


கின்றன. இவைகளை எண்ணி, வெவ்வேறு இனங்களாகப் பிரித்தால், சுமார் 14 பிரிவுகள் ஏற்படுகின்றன. இவற்றுள் முக்கியமானவை, டில்லி வகுப்பு, ஜான்பூர் வகுப்பு, மாலவதேச வகுப்பு, தக்ஷிண வகுப்பு, வங்காளிய வகுப்பு என்று சொல்லலாம். இந்தப்




தாஜ்மஹால் - ஆக்ரா.

பட்டாணியர் டில்லிச் சிற்ப வகுப்பின் ஒரு தொடர்ச்சிதான், மொகலாயர்களால் கட்டுவிக்கப்பட்ட கட்டிடங்கள். இவை முக்கியமாக இரண்டு இடங்களில் இருக்கின்றன. அதாவது, டில்லியிலும் ஆக்கிராவிலும். லாகூரிலும், அலகாபாத் அல்லது பிரயாகையிலும் சில கட்டிடங்கள் இருக்கின்றன; ஆனால் அவைகள், டில்லியிலும், ஆக்கிராவிலும் இருக்கும் முக்கிய கட்டிடங்களின் புழுதி விலை கூடப் பெறா. இத்துடன் சேர்ந்தவைகளாக, அயோத்திராஜ்யத்


துக்கு ராஜதானியாய்ச் சுமார் 3 நூற்றாண்டு இருந்த லக்குநோ, அல்லது லக்ஷ்மணபுரியி லுள்ள மசூதிகளையும், நவாப் அரண்மனைகளையும், ஒன்று இரண்டு சமாதிகளையும் கூறலாம். ஆனால் அவைகள், மொகலாய சிற்பமும் கட்டிட வேலையும் எவ்வளவு அழிந்து போயின என்பதைக் காட்டுவது தவிர, அவைகள் எவ்வாறு நல்ல



ஜும்மா மஸ்ஜித் - ஆக்ரா

ஸ்திதியில் தழைத்து ஓங்கி வளர்ந்தன என்பதைக் காட்டவில்லை. இவைகளில் முக்கியமானவை, 'அமாம்பாரா' என்னும் மசூதியும், மஸ்யக்கோவில் என்னும் முகம்மதியப் பள்ளியும், கெய்ஸர் பாக்கில் இருக்கும் சில கட்டிடங்களும், ஒன்று இரண்டு அயோத்யா வாஸிர் (Vazier) கள் கடைசியில் தூங்கும் ஸ்தானங்களுமாம். வாஸிர்களு

டைய அரண்மனையானது, இப்பொழுது, ஆங்கிலர்கள் குடிப்பதற்கும், கூத்தாடுவதற்கும் 'கிளப்பாய் (English Club) உபயோகப்படுகிறது. அது கோமதி நதியின் கரையில் இருப்பதால், தோணி வீடாகவும் உபயோகப்படுகிறது. டில்லியிலிருக்கும் எல்லாக் கட்டிடங்களிலும் மிகவும் பெரிதாய், முகம்மதிய உலகிற்கே நடு




அக்பர் மசூதி

நாயகம் போலும் விளங்குவது, கார்டோவா Cordova), கெய்ரோ (Cairo), பக்தாத் (Bagdad), கான்ஸ்டான்டி நோப்பில்.(Constantinople), மெக்கா(Mecca), டமாஸ்கஸ் (Damascus), சாமார் கண்ட் Samar khand)முதலிய இடங்களிலுள்ள மசூதிகளைக் காட்டிலும் எவ்வளவோ பெரிதாய், ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஒரேகாலத்

தில் தொழும்படி விஸ்தாரமான முற்றத்துடன் கூடின இந்த மசூதி போல் பெரிது உலகில் வேறு எங்கும் இல்லை என்னும்படி விளங்குகின்ற ஜும்மா மஸ்ஜீத் என்பது. முகம்மதியர்களுக்கு, எல்லா நாள்களிலும் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை தொழுவதற்கு மிகவும் புண்ணியமான தினமாதலால், இந்தக் கிழமையன்று, இங்கு ஆயிரக்கணக்காய் அவர்கள் வருவதாலும், இதை வெள்ளிக்கிழமை மசூதி, அல்லது, ஜும்மா மஸ்ஜித்(Jumma musjid) என்று கூப்பிடுகிறார்கள். உருது, பார்ஸீக பாஷை கற்று நூல்களை படித்துள்ளோருக்கு, இதன் மகிமை நன்று விளங்கும். டில்லியில் இருப்பதுபோல, இம் மதத்தவர் தொழும் வேதக்கோயில், ஆக்கிராவிலும் ஒன்று இருக்கிறது. இதற்கும் பெரிய ஜும்மா மஸ்ஜீத் என்றும், நல் முத்துக்கோயில் என்றும் வழங்கி வருகிறது. வேதப்பள்ளிகளில் நல்முத்து என்றால், அந்தப் பெயர், இதற்கே தகும். ஏனெனில், இதைக் காட்டிலும் அழகிய கோயில் உலகில் எங்கும் இல்லை. இது 'ஷாஜீகான்'(Shah Jehan) என்னும் மொகலாய அரசரால் கட்டப்பட்டது. சுத்தமான வெள்ளைச் சலவைக்கல்லால், இது உதிர் காலத்து மேகம் போலும், தாமரை நூலின் வெண்மை போலும், மாசி மாதத்துப் பௌர்ணமி சந்திரனின் பொலிவு போலும், மானஸஸரஸில் நீந்தும் ராஜ ஹம்சத்தின் இறக்கைகளின் தூய்மை போலும், பால் சமுத்திரத்தின் நீர்த்திவலைகள் உருவெடுத்து எப்படிச் சமுத்திர மதனத்தில் ஸ்ரீயின் வடிவாய் வந்தனவோ அப்படியே இதுவும் மொகலாய அரசர்களின் ராஜ்ய லக்ஷ்மியே உருவம் கொண்டு வந்ததுபோலும், விளங்குகின்றது. இதன் அழகை வர்ணிக்க மானிடர்களால் முடியாது. ஆயிரம் நாவு பூண்ட ஆதிசேஷனே வரவேண்டும். ஆகையால், நேரில் பார்த்தே ஆனந்தம் கொள்ளவேண்டுமே யொழிய, சித்திர மூலமாயும், எழுத்து மூலமாயும் வர்ணிக்க இயலாது.

---


## சோதிஷ சாஸ்திர பிரகடணம்.

1. ஜாதகத்தினுடைய நகலாவது, அல்லது பிறந்த வருஷம், மாதம், தேதி, கிழமை, பகல் நாழிகை அல்லது ராத்திரி நாழிகை, ஆண், பெண், பிறந்த ஊர் இவைகளை எங்களுக்கு எழுதி அனுப்பினால், ஜாதகரிட ரூபம், ஸ்வபாவம் சரீர தாருட்யம், தன ஸம்பாதனை, ஸஹோதரம், மாதா வித்யை, பூ ஸம்பாதனை, ஸந்தானம் சத்துரு, ரோகம் குணம் களத்திரம் களத்திர ஆயுர்த்தாயம், களத்திர அன்யோன்யம், களத்திர ரூபம், ஸ்வபாவம், சரீர தாருட்யம், ஜாதகரிட ஆயுர்த்தாயம், பாக்யம், பிதுரு ஸௌக்யம், தொழில், ஜீவனம், லாபம், விரயம், இப்படியாக பாவ பலன்கள் எழுதி வி. பி. செலவுள்பட ரூ. 1—4—0 க்கு வி. பி. யில் அனுப்பப்படும். 1. மஹா தசைக்கு. 9. புத்திகளின் பலன்கள் எழுத ரூ. 2.

ஸ்ரீ கிருஷ்ண விலாச ஜோதிஷ சாலை,
மேட்டு கனூர், கரூர், S. I. Ry.

# பத்திராதிபர் குறிப்புக்கள்

(320-ம் பக்கம் தொடர்ச்சி)

18. ஸர் சுரேந்திர நாத பானர்ஜி — இந்த மாதம் காலஞ்சென்ற இவர் இந்தியப் பழம் பெரு மக்களில் ஒருவர். சத்தியேந்திர நாத தாகூர், உமேச சந்திர தத்தர், இவர்களுடன் ஐ.ஸி.எஸ். பரீக்ஷையில் தேறி, அஸிஸ்டண்ட் கலெக்டரானார். அந்த உத்தியோக நிருவாகத்தில் தப்பு தஸ்தாவேஜுக்குக் கையொப்பமிட்டதற்காக வேலையினின்றும் நீக்கப்பட்டார்; இதன் உண்மைக் காரணம் வேறெனபர். அப்பால் இவர் கல்வி போதனை முயற்சியைக் கைக்கொண்டு, கல்கத்தாவிலே சிறந்த காலேஜின் தலைவராக விளங்கினார். 'வங்காளி' பத்திரிகையையும் ஸ்தாபித்து நடத்திவந்தார். இந்தியன் நாஷனல் காங்கிரஸின் மூலபுருஷர்களில் ஒருவராயிருந்தது மன்றி, ஆண்டு தோறும் அதன் கூட்டத்தில் பேசும் வாக்குவல்ல மேதாவிகளில் மிகச் சிறந்து விளங்கினார். பல ஜன சமூகத்தில், இங்கிலீஷில் இவரினும் திறமையாய்ப் பேச வல்லாரில்லை என்பது பலர் துணிவு. இந்தியர்களின் உரிமைகளுக்காக இவர் செய்த போராட்டங்களைக் கணக்கிடுவது எளிதன்று. அப்படியிருந்தும், அரசியல் திருத்த முறைப்படி ஏற்பட்ட ராஜாங்கத்தில், இவர் நிருவாக அதிகாரத்தை வகித்தது, இந்திய தேசபக்தர்கள் பலரின் தற்கால கொள்கைகளுக்கும் இவருடைய கொள்கைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கும். ஆயினும், இவர் இயற்றியுள்ள தேசத்தொண்டு சிறிதன்று. இளமையிலே இவர் துரைத்தனச் சேவகத்தை நீங்கினது, நமது நாட்டின் நற்காலமென்றே கூறலாம். இவர் ஆன்மா சாந்தியடைவதாக!

19. சென்னையில் சுயராஜ்யக்கட்சி — வங்காளத்திலே வளர்ந்து வெற்றிகள் பெற்ற இந்தக் கட்சியானது, தேசபந்து தாஸ் இறந்த பின்னர், பிளவுபட்டுச் சிதறுண்டு, பலங்குன்றி வருகின்றது. சென்னையிலோ, இந்தக் கட்சி நாளுக்கு நாள் பலப்பட்டு வருகிறது. சென்னை நகர பரிபாலன சபைத் தேர்தலில் இக்கட்சியார் சமீபத்தில் அடைந்த வெற்றி வியக்கத் தக்கது. தந்நலத்தையும் அதிகார ஆசையையும் தவிர்த்துப் பொது நலத்துக்காக உண்மையில் உழைப்பாராயின், இக் கட்சியார் சட்ட சபைத் தேர்தலிலும் இவ்வசனே சிறப்புற்றுச் செல்வாக்கிற் பெருகுவர் என்பது திண்ணம். இதுவன்றி இக்கட்சியார் கவனித்து முன் காக்க வேண்டுவது மற்றொன்றுண்டு: சாமானியப் படையாட்களின் ஒழுக்கம் எவ்வாறாயினும், நாட்டு மகாஜனங்களின் முன் வந்து தளபதிகளாய் இலங்குவோர், கூடியவரை ஒழுக்கசீலர்களாயிருத்தல் அவசியமாகும். கட்சித் தலைவர்கள் அப்படிக்கில்லாமல், வேறு எவ்வித திறமை வாய்ந்தவர்களாயிருப்பினும், அதிகம் பயன்படாது; கட்சி சீர்குலைந்துபோம் என்பது, அநுபவசித்தாந்தம். "தமிழ் நாடு" பத்திரிகையில் சில நாட்களுக்கு முன் பிரசுரமான 'இங்கிலாந்தில் சுயராஜ்யக்கூத்து' என்னும் தலையங்கமும் சித்திரப்படமும், இச் சந்தர்ப்பத்தில் பலர் ஞாபகத்துக்கு வரலாம்.

அ. மாதவையர்.